உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 35 | நள – ஐப்பசி – 10—11—76 | இதழ் 12

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. – சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## மாமழை போற்றுதும்

### இறைவன் ஆணைக்குள் :

பரங்கருணைத் தடங்கடலாகிய இறைவன் உயிர்களிடம் கழிபேரிரக்கம் உடையவன். உயிர்கள் உய்திபெறற்பொருட்டு அவற்றிற்குத் தனு கரணம் புவனம் போகம் ஆகியவற்றைத் தந்து ஆட்கொள்ளுகின்றான். உயிர்கள் இன்பத் துன்பங்களை நுகர்தற்கென அமைக்கப்பட்ட இவ்வுலகின்கண் அவ்வுயிர்கள் உண்டுவாழும் பல்வேறு உணவுப் பொருள்களைப் படைத்தளிக்கின்றான். அவ்வுணவுப் பொருள்கட்கெல்லாம் மூலமாகிய மழையைப் படைத்துள்ளான். மழைக்கு மூலமாகிய கடலும் கதிரவனும் காற்றும் அவ்விறைவனால் இயங்குவனவேயாகும்.

மழை பெய்வித்தல் மனித முயற்சிகளுக்கு அப்பாற்பட்ட தொழிலாய் இருப்பதைக் காண்கின்றோம். மனித சமுதாயம், தனக்கு மேம்பட்ட தலைவன் ஒருவன் உள்ளான், அவனருளே இவ்வையகத்தை வாழ்விக்கிறது என்ற உண்மையை அறிதற்கு இது பயன்படுகின்றது.

**மும்மாரி :**

அக்காலத்தில் மன்னர்கள் அரசவை கூடியவுடன் அமைச்சர்களைப் பார்த்துக் கேட்கும் முதற் கேள்வி மாதம் மும்மாரி மழை பொழிகின்றதா? என்பதாகும். மழை பெய்வதையே தங்கள் ஆட்சியின் நேர்மைக்குரிய அளவு கோலாகக் கொண்டனர் அக்கால மன்னர்கள்.

" வேதம் ஓதிய வேதியர்க் கோர் மழை
நீதி மன்னர் நெறியினுக்கு ஓர் மழை
மாது கற்புடை மங்கையர்க்கு ஓர்மழை
மாதம் மூன்று மழையெனப் பொழியுமே "

என்பது விவேக சிந்தாமணி.

நாட்டில் மழைவளம் குறையும் காலங்களில் மக்கள் தெய்வப் பிரார்த்தனைகள் புரிவதைக் காண்கின்றோம். மழை கடவுள் கருணையினாலேயே பெறத்தக்கது என்பதை உணர்த்தவே திருவள்ளுவர் கடவுள் வாழ்த்திற்கு அடுத்த அதிகாரமாக வான் சிறப்பினை அமைத்துள்ளார்.

மனித முயற்சியால் வருவிக்கப்பெறும் செயற்கை மழை, பெரும் பொருட்செலவினை உண்டாக்குமே யொழிய நம் தேவையனைத்தையும் நிறைவேற்றும் அளவிற்குப் பயனளிக்காது.

**கோள்நிலை திரிதல் :**

'மழையின்றி மாநிலத்தார்க்கில்லை' எனப் பழந்தமிழ் பாடுகின்றது. மிக்க மழையும், மழையின்மையும் நாட்டிற்குக் கேடு விளைக்கும். மழை பருவத்தில் அளவாகப் பெய்தால் உலகம் நன்மை பெறும். பெய்யவேண்டிய பருவத்துப் பெய்யாது பொய்த்து விடுவதாலும், பெய்யவேண்டாதபருவத்துப் பெய்து விடுவதாலும் உலகம் இருவகைப் பயன்களையும் எய்தும். இதனையே திருவள்ளுவர்,

'கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை'

என்று கூறியருளுகின்றார்.

மழையின்மைக்கு நூல்களில் கூறப்படும் காரணங்கள் பலவாகும். அவற்றுள் கோள்நிலை திரிதல் ஒன்று. கிரகங்கள் தத்தம் வழிகளினின்று வழுவினால் பருவநிலைகள் மாறுபடும். அதனால் மழை, பனி, வெயில் முதலியவைகள் உண்டாதலில் மாறுபாடுகள் விளையும். இன்று நாடெங்கும் இத்தகைய பருவ

நிலே மாற்றங்கள் ஏற்படுதலே விஞ்ஞானிகள் ஆராய்ந்து கண்டு உலகிற்கு உணர்த்தி வருகின்றனர்கள்.

இன்று உலகெங்கும் தண்ணீர்ப் பஞ்சம் உண்டாகியிருக்கிறது. பனிநாடாகிய இங்கிலாந்திலும்கூடத் தண்ணீர்ப் பஞ்சம் உருவாகியிருப்பதைக் காணுகின்றோம். இவ்வாறு உலக நாடுகள் பலவற்றிலும் மழையின்மை ஏற்படுதற்குக் காரணம் கோள் நிலை மாற்றம் என்று கூறினாலும் அதற்கு அடிப்படைக் காரணம் மக்களிடம் நீதி, நேர்மை, பக்தி, பண்பாடு முதலியன குறைந்து வருவதையே அடிப்படைக் காரணமாகக் கூறுதல் வேண்டும். மக்கள் தங்கள் தங்கள் கடமைகளைச் சரியாகச் செய்து வந்தால் இறைவன் இன்னருள் எளிதாகக் கிடைக்கும். கடவுளை மறந்து எல்லாவற்றையும் நாமே செய்கின்றோம், நாமே தலைவர் என்ற முனைப்பினை அகற்றுதற்கே இத்தகைய நிலைமாற்றங்களை இறைவன் உண்டாக்கியருளுகின்றார். வானம் பொய்த்து வளம் பிழைப்புறுதற்குரிய காரணத்தை மணிமேகலை,

" மன்னவன், கோல்நிலை திரிந்திடில் கோள்நிலை திரியும்
கோள்நிலை திரிந்திடின் மாரிவறங்கூறும் "

என்று கூறுகிறது.

" முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல் "

என்றும் திருக்குறளில் மழை இன்மைக்குரிய காரணத்தை வள்ளுவர் தெளிவாகக் கூறிடக் காண்கிறோம்.

## வழிபாட்டின் பயன்:

அடுத்துத் திருக்கோயில் வழிபாடுகள் செம்மையாக நடைபெறவில்லையானால் மழைவளம் குறையும் என்று திருமந்திரம் கூறுவதைப் பார்க்கின்றோம்.

" முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடில்
மன்னர்க்குத் தீங்குள, வாரிவளம் குன்றும் "

என்பது திருமூலர் திருவாக்கு. திருக்கோயில்களில் சிறப்பொடு பூசனைகள் செய்விப்பதனாலேயே மழை வளம் உண்டாகும் என்பதைத் திருமூலர் எதிர்மறையால் கூறக்காண்கின்றோம். நல்லவர் உள்ளம் வெதும்பிடும் நிகழ்ச்சிகள் நாட்டில் நடைபெற்றால் வாரிவறம் கூரும் என்று கூறுவர்.

" ஈசனடியார் அடியார் இதயம் கலங்கிடில்
தேசமும் நாடும் சிறப்பும் அழிந்திடும் "

என்பது திருமந்திரம்.

" நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை "

என்ற தொடர் மக்கள் அனைவரும் நல்லவர்களாக வாழ்தலே மழைக்குக் காரணமாதலைத் தெரிவிக்கிறது.

## கொடும்பாவி :

மழையின்மை, மழைகுறைவு, மழைமிகுதல் முதலிய நிகழ்ச்சிகளுக்குக் காரணம் மக்களின் பாவக் கொடுமையேயாகும் என்பதை எல்லா நூல்களும் ஒருமுகமாகக் கூறிடக் காண்கிறோம். இவ்வுண்மையினை நாட்டில் கொடும்பாவிகட்டி இழுக்கும் நிகழ்ச்சி உறுதிப்படுத்தும். எங்கள் ஊரில் கொடிய பாவி எவரும் இல்லை அத்தகையோரை இழுத்துச் சென்று ஊர்ப்புறத்தேபோட்டுக் கொளுத்திவிட்டோம் என்பதற்கு அடையாளமாகவே இந் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதனைச்செய்தால் உடன் மழை பெய்வதையும் காண்கின்றோம்.

## போற்றுவோம் :

எனவே எல்லோரும் அறநெறி கடைப்பிடித்தும் அருள் நெறியைப் பின்பற்றியும் வாழ்ந்து தங்கள் பிழைகளை மன்னித் தருளுமாறு இறைவனிடம் வேண்டி வழிபட்டால் இறைவன் திருவுளம் இரங்கி யருளுவான். வான்முகில் வழாது பெய்யும். வயல்களில் வளங்கள் பலவும் சுரக்கும்.

மக்கள் இவ்வுண்மையை உணர்ந்து தத்தம் கடமைகளை வழுவாது செய்து இறையருளைப் போற்றி வாழ்வார்களாக. இறைவன் திருவருள் வெள்ளம் நம்மை வாழ்விப்பதாக.

தேவாரம்

" வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே. " — ஞானசம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

---

குறிப்பு :— தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாசியால் இத்தலையங்கம் எழுதத் தொடங்கியதி லிருந்து தொடர்ந்து தஞ்சைத் தரணி முழுவதும் நல்ல மழை பெய்து வருவது குறிப்பிடத்தக்கது.

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருப்பெண்ணாகடம், ஸ்ரீ மெய்கண்டார் குருபூசை விழாவில்
திருவாய்மலர்ந்தருளிய

# ஆசியுரை

24—10—76

கண்ணுதலும் கண்டக் கறையும் கரந்தருளி
மண்ணிடையில் மாக்கள் மலமகற்றும்-வெண்ணெய் நல்லூர்
மெய்கண்டான் என்றொருகால் மேவுவரால் வேறின்மை
கைகண்டார் உள்ளத்துக் கண்.

### வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி :

மெய்கண்டார் இன்றைக்கு எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னே இந்தப்புனிதமண்ணிலேதிருவவதாரம்செய்தார். அவர் அவதரித்தஇக்களப்பாளர்மேட்டில் அமைந்துள்ளமெய்கண்டார் திருக்கோயிலைத் தரிசிப்பதும், இந்த இடத்திலிருந்து அவர் அருளிய நூலைச் சிந்திப்பதும் சிறந்த பேறாக நமக்கு வாய்த்துள்ளது. மக்கட் பிறப்பின் கடவுளை உணர்ந்து வழிபடும் பிறப்பே அரிய பிறப்பு. இறைவன் திருவருள் பெறுவதொன்றே வாழ்க்கையின் குறிக்கோளாகும். அப்பர் சுவாமிகள் இறைவன் திருவடிப்பேற்றிற்குரிய இப்பிறப்பினை வாழ்த்திப் பாடும்பாடல் நம் சிந்தனைக்கு வருகின்றது. அப்பாடலில் தில்லையம்பலத்துக் கூத்தனுக்கு ஆட்பட்டிருப்பதே நம் கடமை என்று கூறுகின்றார் அப்பர்.

வாய்த்தது நந்தமக்கு ஈதோர்பிறவி மதித்திடுமின்
பார்த்தற்குப் பாசுபதம் அருள் செய்தவன் பத்தருள்ளீர்
கோத்தன்று முப்புரம் தீவளைத்தான் தில்லை அம்பலத்துக்
கூத்தனுக்கு ஆட்பட் டிருப்பதன்றோ நந்தம் கூழைமையே.

இத்திருப் பாடலில் அப்பர் பெருமான்பக்தர்களை விளித்துச் சிவபெருமான் திருவடியில் பதித்த நெஞ்சுடையவர்களாய் வாழு மாறு கூறுகிறார். அவனது திருநடனத்தைச் சென்று தொழுதால் அவன் நம் குறைகளைப் போக்கியருள்வான் என்கின்றார்.

தில்லையுட் சிற்றம்பலத்து நட்டம் என்று வந்தாய் என்று கேட்பது போன்றுள்ளது அவருக்கு. அத்தா உன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறே என அதற்கு விடையும் கூறுகிறார் அவர். பத்தனாய்ப் பாடமாட்டேன். எத்தினால் உன்னைப் பக்தி செய்கேன் - என்றும் என்னை நீ இகழ வேண்டா என்றும் வேண்டுகின்றார்.

**பத்தருள்ளீர் :**

பத்தருள்ளீர், என அடியார்களை விளிக்கின்றார். பக்தர்கள் சிவபிரான் திருவடிகளில் பேரன்புடையவர்கள். அவனது திருவடிகளுக்குத் தம்மை ஆட்படுத்தி வாழ்பவர்கள். சிவபிரானால் அருளிச் செய்யப்பட்ட வேதாகமங்களின் வழி ஒழுகுதலையும் காலந்தவறாது இறைவனைவழிபாடுசெய்வதையும் கடமைகளாகக் கொண்ட நல்லவர்கள். இறைவன் திருவடிகளையே சிந்திப்பதனால் இவர்களே நல்லோராவர். இறைவன் திருவடிகளைத் திருவள்ளுவர் நற்றாள் என்று கூறுகிறார். நற்றாள் என்பதற்குப் பரிமேலழகர் பிறவிப் பிணிக்கு மருந்தாகலின் நற்றாள் என்றார் என்று சிறப்புரை கூறுவார். இத்தகைய நற்றாளைச் சிந்திக்கும் அடியார்களே நல்லோராவர்.

**இம்மை மறுமை இன்பம் :**

இறைவன் திருவடிகளில் நாம் செலுத்தும் பக்தி இம்மை மறுமை ஆகிய இருவகை இன்பங்களையும் தரவல்லது. முடிந்த முடிபாக நாம் அடையும் பயன் அவனது திருவடிப்பேறேயாகும். இடையில் அவ்விறைவன் திருவருள் அவாந்திரப் பிரயோஜனமாக நமக்கு எல்லா நன்மைகளையும் தருகின்றது.

ஒருவன் வாழைத் தோட்டம் போடுகின்றான். வாழை மரங்களுக்கு இடையில் குறுகிய காலத்தில் பயன்தரக்கூடிய கீரை கத்தரி முதலிய பயிர்களைப் பயிரிடுகின்றான். முதலில் கீரை, கத்திரி ஆகிய பயன்களைப்பெற்றாலும் முடிவில வாழையின் பயனை அடைகின்றான். அதுபோல, கடவுளை வழிபடுவதனால் இடையில் வரும் எல்லா நன்மைகளையும் அநுபவித்துக் கொண்டே முடிவில் நாம் அவன் திருவடிகளை அடையலாம்.

### தென்னார்க்காடு மாவட்டம் :

தமிழ் நாட்டில் தென்னார்க்காடு மாவட்டத்திற்குத் தனிச் சிறப்புக்கள் பல உண்டு. தலங்களிற்சிறந்த சிதம்பரம் இம் மாவட்டத்தில்தான் உள்ளது. நடராஜப் பெருமான் சிதாகாயப் பெருவெளியாகிய சிதம்பரத்தில் ஆனந்த நடனம் ஆடுகின்றார். இத்தலத்திற்கு ஒப்பான சிறந்த தலம் தமிழ் நாட்டில் மட்டு மல்ல; இந்தியப் பெருநாட்டிலேயும், ஏன், உலகிலேயும் கூட இல்லை என்று உறுதியாகக் கூறலாம். இத்தலத்தில் பெருமான் நடனம் ஆடிக்கொண்டிருப்பதால்தான் உலகம் இயங்குகின்றது. இவரது ஆட்டம் நின்றால் அண்டமும் அணுவும் அசையா. உலக இயக்கமே நின்று விடும்.

### சிதம்பரம் கோயில் :

சிதம்பரம் ஆகாசத்தலம் என்பதற்கேற்ப நிலபுலங்கள் இல்லாமலேயே எல்லாக்கோயில்களையும் விடச் சிறப்பாக இத் திருக்கோயிலில் காலந்தவறாது வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. உலகியல் ஆட்சிக்குக் கட்டுப்படாமல் அருளியல் ஆட்சிக்குரிய நிலையில் இக்கோயில் விளங்கிவருகிறது. நடராஜா என்ற பெயருக்கு ஏற்ப இராஜ தர்பாரில் எல்லாம் நடக்கிறது. தில்லை வாழ் அந்தணர்கள் நடராஜப் பெருமானைப் பூஜிக்கும் பேறு பெற்ற பெருமிதமுடையவராய் இறைவன் ஒருவனுக்கே நாம் அடிமையென்ற உணர்வோடு வாழ்ந்துவருகின்றனர். இந்நிலையை வேறு கோயில்களில் காண இயலாது.

### அப்பர் சுந்தரர் அவதாரம் :

இத்திருக்கோயிலைப் பெற்றுள்ள பெருஞ் சிறப்போடு இம் மாவட்டத்திற்கு வேறு சில சிறப்புக்களும் உண்டு. சமயாசாரியர் களில் இருவரும் சந்தானாசாரியர்கள் நால்வரும் இங்குத் திரு வவதாரம் செய்துள்ளனர். சமயாசாரியர்களில் திருநாவுக்கரசர் திருவாமூரிலும், சுந்தரர் திருநாவலூரிலும் தோன்றியவர்கள். இப்பெருமையைச் சேக்கிழார் " அறந்தரு நாவுக்கரசும் ஆலால சுந்தரரும் பிறந்தருள உளதானால் நம்மளவோ பேருலகில் சிறந்த திருமுனைப்பாடித் திறம்பாடும் சீர்ப்பாடு " என்று கூறு கின்றார்.

### சந்தானாசாரியர் :

சந்தானாசாரியர்களில் இருவரைச் சமய உலகிற்குத்தந்த பெருமைக்குரியது பெண்ணாகடம். மெய்கண்டாரும் மறைஞான சம்பந்தரும் இவ்வூரில் அவதரித்தனர். அருணந்திசிவாசாரியார்

திருத்துறையூரிலும் உமாபதிசிவம் தில்லையிலும் அவதரித்தார்கள். மேலும் திருநீலகண்டர் போன்ற நாயன்மார்களும் இங்குத் தோன்றியுள்ளனர். இத்தகைய பெருமைகள் பலவற்றையுடைய இம்மாவட்டத்து மக்கள் தங்கள் பெருமைகளை எண்ணிப் பெருமிதமுறுவதோடு நில்லாது இப்பெருமையை மேலும் வளர்க்கவும் புதுப்பிக்கவும் பாடுபடவேண்டும்.

மெய்கண்டார் :

மெய்கண்டார் திருப்பெண்ணாகடத்தில் அச்சுதகளப்பாளருக்கு அரும்பெறற் புதல்வராய் அவதரித்தார். திருவெண்ணெய் நல்லூரில் தம்முடைய தாய் மாமன் வீட்டில் வளர்ந்து வந்தார். இரண்டு வயதில் மெய்கண்டார் வீதியில் சிறு தேருருட்டி விளையாடிக் கொண்டிருந்தபோது வான்வழியேசென்ற பரஞ்சோதிமா முனிவர் வீதியில் விளையாடிக்கொண்டிருக்கும் மெய்கண்டாரின் பரிபாக நிலையை உணர்ந்து கீழே இறங்கி வந்து அவருக்கு உண்மை ஞானம் உணர்த்தி உபதேசம் செய்து மெய்கண்டார் எனத் தீஷா நாமம் சூட்டி மறைந்தார். மெய்கண்டார் அச்சிவஞான உபதேசத்தைச் சிவஞானபோதமாக வகுத்துத் தம் சீடர்களுக்கு உரைத்து வருகின்றார்.

## திருநோக்கால் ஊழ்வினையைப் போக்குதல் ;

அச்சுதகளப்பாளரின் குடும்பத்திற்குக் குலகுருவாக விளங்கியவர் அருணந்திசிவம். மகப்பேறில்லையே என வருந்தி வந்த அச்சுதகளப்பாளருக்குத் திருமுறையில் கயிறுசார்த்திப்பார்த்து, திருவெண்காடு சென்று முக்குள நீராடினால் மக்கட்பேறு உண்டாகும் என்றுகூறியவர். சகலாகமபண்டிதர் என்று அனைவராலும் போற்றப்பெற்றவர். மெய்கண்டாரின் பெருமைகளைக் கேள்வியுற்று அழுக்காறு கொள்கிறார். அவரிடமிருந்த சீடர்கள் மெய்கண்டாரிடம் ஈடுபடுகின்றனர். தன்னுடைய சீடரின் மைந்தன் தன்னைக் காணவரவில்லையே என்று சினந்திருந்து முடிவில் மெய்கண்டாரைக் காணத் தானே அவர் இருப்பிடம் செல்கின்றார். மெய்கண்டாரின் திருநோக்கம் அருணந்திசிவத்தின் மீது பதிந்த மாத்திரத்தில் அருணந்திசிவம் அடியற்ற மரம் போல் மெய்கண்டார் திருவடிகளில்வீழ்ந்து தம்மை ஆட்கொள்ளுமாறு வேண்டினார். மெய்கண்டார் தம் திருநோக்கினால் அவர்தம் ஊழ்வினையைப் போக்கி அவரைத்தம் சீடராக ஏற்றுக்கொண்டு அருளுபதேசம் புரிந்தருளினார். ஆசாரியனின் திருநோக்கம் பட்ட அளவில் பரிபாகம் பெற்ற சீடர்கள் இருவர் இங்கே நினைவிற்கு வருகின்றார்கள்.

### குமரகுருபரர் – விவேகானந்தர் :

தருமையாதீனம் நான்காவது குருமூர்த்திகளாகிய ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணிதேசிக சுவாமிகளைக் காணவந்த குமரகுருபரர் அவர்கட்கு ஆட்பட்டவரலாறும் அண்மைக்காலத்தில் அத்வைத சமயத்தைச் சேர்ந்த இராமகிருஷ்ணபரமஹம்சரிடத்தில் ஈடுபட்ட விவேகானந்தர் வரலாறும், குருநாதன் பார்வையால் ஆணவமன்று அறியாமை நீங்கி மெய்ஞ்ஞானம் பெற்ற சீடர்களின் பரிபாக நிலைகளை எடுத்துக்காட்டுகின்றன.

### சாதிவேறுபாடுகள் :

மேல் நிலையில் உள்ள ஞானிகளுக்குச் சாதிவேறுபாடுகள் முதலிய ஏற்றத் தாழ்வுகள் இல்லை. உலகியல் வாழ்விற்கும் சமுதாய முன்னேற்றத்திற்குமே சாதிப்பாகுபாடுகள் வகுக்கப்பட்டுள்ளன. மெய்கண்டார் வேளாளர். சிறுகுழந்தை. அவர் தம் தலைமைச் சீடராகிய அருணந்திசிவம் சிவாச்சாரியார்; வயதிற் பெரியவர். தந்தைக்குக் குருவாக விளங்கிய அருணந்திசிவம் மைந்தர்க்குச்சீடரானார். சாமவேதம் உணர்ந்தவரான அந்தணர் குலத்தில் தோன்றிய மறைஞானசம்பந்தர் அருணந்திசிவத்தின் மாணவரானார்.

தில்லைவாழ் அந்தணர்களுள் ஒருவராய்த் தோன்றியவர் உமாபதிசிவம். அவருக்குப் பல்லக்கு, குடை, கொடி, தீவர்த்தி முதலிய எடுபிடிகள் உண்டு. பல்லக்கில் ஏறிவரும் உமாபதி சிவத்தைப்பார்த்து மறைஞானசம்பந்தர் ' பட்ட கட்டையில் பகற் குருடு ஏகுதல் பாரீர்' என்று கூறினார். அவ்வார்த்தைகளைக்கேட்ட உமாபதிசிவம் மறைஞானசம்பந்தரின் சீடரானார். அவரைப் பின் தொடர்ந்துசென்று பரிகலச் சேடம் உண்டு பரிபாகம் பெற்று உண்மை ஞானம் பெற்றார். சந்தானாசாரியர்களின் சிஷ்ய மரபில் சாதிகுலம் முதலிய வேறுபாடுகள் அவர்களது முதிர்ந்த பக்குவ நிலையினால் இல்லாமல் போயின என்பதைக் காணலாம்.

உமாபதி சிவாசாரியாரைத் தில்லை தீட்சிதர்கள் ஜாதிப் பிரதிஷ்டம் செய்து நடராஜப் பெருமானைத் தீண்டி வழிபடாதவாறு செய்தனர். உமாபதி தேவர் சிவஞானம் கைவரப்பெற்ற முதிர்ந்த பக்குவமுடையவர். ஆதலால் நடராஜப் பெருமான் கொற்றவன் குடியிலிருந்த உமாபதி தேவரிடம் எழுந்தருளினார். உமாபதி தேவரது இறையருள் பலத்தையும் பக்குவ முதிர்ச்சியையும் கண்ட தீட்சிதர்கள் நடராஜப் பெருமானைத் தீண்டி

வழிபடச்செய்தனர். உமாபதிசிவாசாரியாரைக்கொடியேற்றுவிழா செய்யக்கூடாது என்று தடுத்தபோதும் பெருமாள் அவரைக் கொண்டே கொடியேற்றுவிக்குமாறு செய்கின்றார். இங்கு தில்லை தீட்சிதர்கள் தங்களது குலதர்மத்தைக்காக்க முற்பட்டார்கள் என்பதையும் உமாபதிதேவரின் முதிர்ந்த பக்குவ நிலைக்கு ஏற்பப் பெருமான் அவருக்கு அருள் செய்தார் என்பதையும் நன்கு தெளியலாம்.

தொண்டும் பயனும் :

வரவேற்புரை கூறிய அமுதமொழி திரு. சுவாமிநாதப்பிள்ளை திருவாமூரிலும் இவ்வூரிலும் இறைவன் திருவருளால் நாம் செய்த தொண்டுகளைக் குறிப்பிட்டார். தொண்டு செய்வதில் பல நன்மைகள் உள்ளன. "அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே" என்பார் தாயுமான அடிகள். கடவுள் தொண்டு செய்யும் போது நமக்கு ஏற்படும் அருளனுபவங்கள் மிகப்பலவாகும். உலகியல் ஆராய்ச்சிக்கும் இவ்வனுபவம் பயன்படுகிறது. உதாரணத்திற்குச் சிலவற்றைக் கூறலாம்.

பெண்ணைக்கரையார் ;

திருநாவுக்கரசுசுவாமிகள் பெண்ணை நதிக்கரையைச்சார்ந்த நாட்டில் வாழும் வேளாளர்குடிப் பெருமக்களில் ஒருவர். இம் மரபு இன்றும் வழக்காற்றில் இருப்பது பலருக்குத் தெரியாது. வேளாளர்களில் பலர் தங்களைப் பெண்ணைக்கரையார் எனச் சொல்லிக்கொள்வதைப் பார்கின்றோம். அச்சொல் மருவி பொண்ணைக்கரையார் என வழங்குகின்றது. இச்சொல்லின் உண்மையை திருவாமூர் அப்பர் பணியில் ஈடுபட்டபோது அறியநேர்ந்தது.

பண்ரெட்டி ;

திருவதிகைக்கு அருகில் உள்ள புகைவண்டி நிலையத்தின் பெயர் பண்ணுருட்டி என்று காணப்படுகிறது. இப்பெயர் எப்படி வந்தது என்று பலருக்குத் தெரியாது. இதனை ஆராய்ந்துகண்டோர்யாரும் இல்லை எனவே தெரிகிறது, திருவாமூர் அப்பர் திருக்கோயில் திருப்பணியின்போது ரெட்டியார்கள் பலருடன் பேசவும் பழகவும் வாய்ப்பு ஏற்பட்டது. ரெட்டியார்களில் ஒரு பிரிவினர் விவசாயிகள். அவர்களுக்குப் பண்டரெட்டி என்று பெயர் எனத் தெரியவந்தது. அச்சொல்லைக் கேட்டவுடன் அவ்வகை ரெட்டியார்கள் வாழும் பண்ரெட்டி என்ற ஊர் மருவி பண்ணுருட்டி

என வழங்குகிறது என்ற உண்மைக்காரணம் புலனாயிற்று. தமிழுலகம் இவ்வூர்ப்பெயரின் உண்மைப்பொருளை உணர்ந்து வழங்கிட இது உதவும். இவ்வாறு உலகியல் அனுபவங்களும் நமக்குப் பல உண்மைகளை அறிய உதவுவதைப் பார்க்கின்றோம்.

## தொண்டர்கள் தேவை :

சமய வளர்ச்சிக்குப் பல தொண்டர்கள் தேவை. கடமை உணர்வோடு பணிபுரியும் தொண்டர்களால்தான் சமயம் வளரும். இத்தகைய சமயத் தொண்டர்களில் ஒருவராய்த் தம்மை அப்பர் பெருமான் திருப்பணியில் ஆட்படுத்தி வாழ்ந்துவருபவர் பெரிய தம்பிப் பிள்ளை என்பவர். 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற அப்பரடிகளின் அறிவுரையைத் தன் வாழ்க்கை இலக்ஷிய மாகக்கொண்டு பணிசெய்து வருகின்றார். அதுபோலப் பலரும் பயன்கருதாது சமயப் பணி புரிய முன்வரவேண்டும். கடவுள் நாம் செய்யும் பணிகளுக்கு ஏற்ற ஊதியத்தை எவ்வகையிலோ நமக்குத் தந்து விடுவார். சமயத் துறையில் அனைவரும் ஒருங்கிணைந்து பணி செய்யவேண்டும்.

திருவாரூரில் அன்பர் திரு. R. கனகசபை பிள்ளை அவர்கள் தலைமையில் அமைந்துள்ள குழுவினர் சிறப்பாக அப்பணியினைச் செய்துவருகின்றார்கள். அவ்வகையில் இவ்வூரிலும் சைவ மெய்யன்பர்கள் ஒன்றுபட்டுக் குழு அமைத்துப் பணிகள்செய்ய முன்வந்திருப்பது பாராட்டுக்குரியது.

## முதற் சூத்திரக் கருத்து :

மெய்கண்டார் குருபூசை விழாவில் இன்று அவர் அருளிய சிவஞானபோதத்தின் முதற் சூத்திரத்தைச் சிந்திப்போம்.

இவ்வுலகம் உயர்திணைப் பொருள், அஃறிணைப்பொருள் என இருவேறு பொருட் பகுப்பைக் கொண்டுள்ளது. உயர்திணைப் பொருள் ஆண் பெண் என்ற பாகுபாடுடையதாதலால் அவன் அவள் என்ற சொல்லால் குறிக்கப்படும். அஃறிணைப் பொருள் அது என்ற சொல்லால் சொல்லப்படுகிறது. ஆதலால் இவ்வுலகம் அவன் அவள் அது என்று குறிக்கப்படும் பொருள்களின் தொகுதியே என்பது தெளிவாகும். இம்மூன்றின் தொகுதியாகிய உலகம் தோற்றம் நிலை கேடு எய்துவதைக் காண்கிறோம். இவ்வாறு உலகம் முத்தொழிலுடைமையால் அது ஒருவனால் தோற்றுவிக்கப்பட்டு நிலைபெறுவதேயாகும். அது தான் ஒடுங்குவதற்குக் காரணமான கடவுளாலேயே தோன்றுவது. ஆணவ

மலந்தீர்ந்து ஒடுங்காமையினுல் அது ஒடுங்கியதோடு அமையாது மீளவும் உண்டாகின்றது. அதற்கு ஒடுக்கமாய முடிவைச் செய்யும் கடவுளே ஆதியும் ஆகின்ருன் என்பது முதற் சூத்திரத்தின் கருத்து.

" அவன் அவள் அது எனும் அவைமூவினைமையில்
தோற்றிய நிதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி என் மனர் புலவர் "

என்பது முதற் சூத்திரம்.

இவ்வாறு பன்னிரு சூத்திரங்களால் சைவசித்தாந்த உண்மைப் பொருள்களை உரைத்தருளிய மெய்கண்டார் சைவ உலகின் ஒளிவிளக்காய்த் திகழ்பவர். அவருடைய குருபூஜைப் பெருவிழாவினைச் சிறப்பாகக் கொண்டாடும் பெண்ணுகடம் வாழ் சைவ மெய்யன்பர்கட்கும் ஏனைய மெய்யன்பர்களுக்கும் எல்லா நலன்களும் உண்டாகுமாறு செந்தமிழ்ச் சொக்கள் திருவருளைச் சிந்தித்து நிறைவு செய்கின்ருேம்.

---

## ஐப்பசி மாத ஜன்ம நட்சத்திர விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களது மாத ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளன்று 18 — 10 — 76 திங்கட்கிழமை ஆதீனத்திற்குச் சொந்தமான திருக்கருப்பறியலூர் ஸ்ரீகோல்வளை நாயகி உடனுய ஸ்ரீ குற்றம்பொறுத்தீசுவர சுவாமி தேவஸ்தானத்திலும் திருக்குரக்குக்கா ஸ்ரீ குந்தளநாயகி உடனுய ஸ்ரீ குந்தளநாதேஸ்வர சுவாமி திருக்கோயிலிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பு வழிபாடு நடைபெற்றது. "திருக்கருப்பறியலூர் - திருக்குரக்குக்காத் திருப்பதிகங்கள்" என்ற நூல் வெளியிட்டு வழங்கப்பட்டது. திருப்பதிகப் பாராயணமும் விரிவுரையும் நிகழ்த்தப்பெற்றன. ஆதீனக் கல்லூரி மாணவர்கள் திருக்கருப்பறியலூர் நந்தவனத் தூய்மைப் பணி செய்தனர். அன்பர்கள் பலர் வழிபாட்டில் கலந்துகொண்டு வழிபட்டுப் பயன் பெற்றனர்.

---

சிறுவர் பகுதி :-

சென்ற இதழ்க் கணக்குகளுக்கு விடை :- (1) 25. (2) 64.

# தருமம் தங்கும் தருமபுரம்

திரு. த. ரா. இராஜகோபாலன்

[ தருமம் செய்பவர்கள் பலர் இருக்கலாம். தர்ம வழியில் சென்று தருமத்தைக் காப்பவர்களும் பலர் உண்டு. தர்ம ஸ்தாபனங்கள் பல உள்ளன. ஆனால் தர்மதேவதை சந்தோஷம்கொண்டு தானே தங்குவதற்கு ஆசைப்பட்ட இடம் இந்த தருமபுரம். இவ்வூரில் தருமம் தங்கியுள்ளது. ஆகவே தருமம் தங்கும் தர்மபுரம் என்று அழைப்பதில் பெருமை கொள்கிறோம். ] —ஆசிரியர்.

காவிரி நதியும் அதன் கிளைகளும் வளப்படுத்தும் தஞ்சை மாவட்டத்திலே மாயூரத்திற்குத் தனிச் சிறப்புகள் பல உண்டு. மாயூரத்தைச் சுற்றித்தான் எத்தனை தலங்கள்! வைத்தீஸ்வரன்கோயில், சீகாழி, திருக்கடையூர், ஒருசில உதாரணங்கள். இவைகளை நிர்வகிக்கும் தருமபுர ஆதீனமும் மாயூரத்தை அடுத்துள்ளதுதான். மாயூரத்திலிருந்து திருக்கடையூர் செல்லும் மார்க்கம். எங்குநோக்கினும் பசுமை. தஞ்சைக்கே பிரத்யேகமான கிராமச் சூழ்நிலை. இவற்றைக்கண்டுகொண்டே தருமபுரம் அடையலாம். தருமபுரம் என்றாலே தருமபுர ஆதீனம் என்றுதான் பொருள். அவ்வளவு பெருமைபெற்றது ஆதீனம்.

தருமபுர ஆதீனம் பலவித அறத்தொண்டுகளிலே ஈடுபட்டதாகும். சமயத்தொண்டும் இறைத்தொண்டும் முக்கியமாயினும் வித்யாதானம், சத்காரியங்களுக்கான கொடைகள் இவற்றில் பெரிதும் ஈடுபட்டு அரும்பணி புரிந்து வருகிறது ஆதீனம். இச்சீர்மிகு ஆதீனத்தின் வரலாறு, அது ஆற்றும் பணிகள்பற்றி நம் வாசகர்கள் அறிவது மிக அவசியம்.

அமரத்துவம் வாய்ந்த புகழ்கொண்ட நான்கு சைவ சமய ஆசார்யர்கள் தமிழுக்கும் சமயத்திற்கும், இறை பக்திக்கும் ஆக்கம் அளித்து முக்தி எய்திய பிறகு முக்கியமாக சந்தான ஆசார்யார்கள் இப்பணியை ஏற்றனர். இவர்களது பரம்பரை ஆதியாம் கைலயங்கிரி வாசனிடமிருந்து வழிவழி வருவதாகக் கொள்ளப்படுகிறது. இறைவன், அவர் வழிவந்த நந்தி, சனற்குமாரர்கள், சத்திஞான தர்சனி, பரஞ்சோதிமுனிவர், மெய்கண்டார்வரை வருகிறது. மெய்கண்டார்க்குப் பிறகு வரிசையாக அருள்நந்தி சிவாசாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதி

சிவாசாரியார், அருள்நமசிவாயர் எனப் பரம்பரை வழி. அருள் நமசிவாயருக்குப் பிறகு பரம்பரை பல பாகங்களாகப் பிரிகிறது. அவற்றுள் முக்கிய பரம்பரை தருமபுர ஆதீன ஆசார்யபரம்பரை. இதை நிறுவியர் ஸ்ரீ குருஞானசம்பந்தர்.

குருஞானசம்பந்தர் ஸ்ரீவில்லிபுத்தூரிலே ஜனித்தார். கல்விப் பயிற்சிக்குப்பின் பெற்றோருடன் மதுரையில் ஈசனைத் தரிசிக்க வந்த அவர் அங்கேயே தங்கிவிட்டார். இறைவன் அருளால் பொற்றாமரைக் குளக்கரையிலே அவர் விரும்பிய பூஜா மூர்த்தி கிடைக்கப்பெற உபதேசம் நாடும் அவரைத் திருவாரூருக்குச் செல்லப் பணிக்கிறான் இறைவன். திருவாரூரில் தியாகேசர் கோயிலில் ஆரூர் ஞானப்பிரகாசரைக் கண்டு குருவாகக் கொள்கிறார். குரு அவருக்கு சிவஞான உபதேசம் அளிக்கிறார். திருவாரூரில் தங்கியிருந்த நாட்களில் ஒரு நாள், ஓர் அற்புதம் நிகழ்ந்தது. திருக்கோயில் அர்த்தசாம வழிபாட்டிற்குப்பின் இல்லம் திரும்பினார் ஞானப்பிரகாசர். அவருக்கு வழக்கமாக வழி காட்டுவதற்கு விளக்கேந்திச் செல்பவர் வராததால் சீடரே கைவிளக்கேந்திச் சென்றார். இதை யறியாத குரு வீடு அடைந்ததும் ‘நிற்க’ எனப் பணித்து உள்ளே சென்றார். நள்ளிரவு மழை கொட்ட ஆரம்பித்தது; அசையாது நின்றார் சீடர். கொட்டும் மழையில் ஒருமழைத் துளிகூட ஞானசம்பந்தர்மேலோ, விளக்கின்மேலோ படவில்லை. விடியற்காலை இல்லத்தின் வாயிலுக்கு வந்த ஞானப்பிரகாசரின் மனைவி இவ்வற்புதம் பற்றிக் கணவரிடம் தெரிவிக்க, அவர் வாயிலுக்கு விரைந்தார். அற்புதத்தைக் கண்டார். ‘நீரே அருளொளி வழங்கும் குருநாதராகிவிட்டீர்’ என்று அருளி அவரைத் தருமபுரம்சென்று சிவஞான உபதேசம்புரிந்து வாழப் பணித்தார். ஞானசம்பந்தருக்கு குருவை விட்டுப்பிரிய மனம் இல்லை. இதை அறிந்த ஞானப்பிரகாசர் வாரம்ஒருமுறை தன்னை வந்துபார்த்துச்செல்லுமாறு அருளினார். தருமபுரம்வந்தகுருஞான சம்பந்தர் அருளாட்சிபுரிந்து தவம்பெருக்கி வாழ்ந்தார். தருமபுரீசுவரர் கோயில் நிர்வாகமும் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவரது ஆன்மீகச்சிறப்புக்கண்டு பலர்வந்து கூடினர். தருமபுர மடாலயம் நிறுவப்பட்டது. பல பக்குவ சீடர்களுக்கு சிவ ஞானோபதேசம் செய்தார். தன் பரிபூரண நிலை நெருங்கி வருவதை யறிந்த குருஞானசம்பந்தர் உபதேச பரம்பரையை வளர்த்துவர ஆனந்தபரவசர் என்பவருக்கு உபதேசித்து ஜீவ சமாதி கூடியிருந்தார். ஆனால் ஆனந்தபரவசரோ சிவசமாதி கூடிவிடவே ஜீவசமாதியினின்றும் எழுந்தருளி சச்சிதானந்தர் என்பவருக்கு ஞானோபதேசம் செய்தார். சாதாரண நிலையிலிருந்த அவருக்கு அநுபூதி நிலை கூடச்செய்ய மீண்டும் எழுந்

தருளி ஆசிர்வதித்து மீண்டும் ஜீவசமாதி நிலை அமர்ந்து இறுதியில் நிரந்தர சமாதி எய்தினர். சச்சிதானந்தருக்குப் பிறகு பரம்பரை தொடர்ந்தது. குருஞானசம்பந்தர் சிவபோக சாரம், சொக்கநாத வெண்பா, சோடசகலாப்ரசாத ஷட்கம், சொக்க நாதக் கலித்துறை, ஞானப்பிரகாசமாலை போன்ற நூல்களை இயற்றினர். இவரது சமாதி பின்னல் கோயிலாக உருப் பெற்று ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலயமாகத் திகழ்கின்றது.

தருமபுர ஆதீன பரம்பரை பிரபல மகாசந்நிதானங்களால் அணி செய்யப்பட்டு வந்துள்ளது. தற்போதைய இருபத்தா ருவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளாவார்கள். இவர் திருமுறைகளை முறையாகப்பயின்று முறையாகப் பாடக்கூடியவர்கள். சிவபூஜை வழிபாட்டைத் தவருது செய்து வருபவர்கள். அழகிய நடையில் அற்புதமாய் உபதேசிக்கவல்லவர்கள். இவர்களது மேற்பார்வை யில் ஆதீனமும் ஆதீனக்கோயில்களும் அற்புதமாக நிர்வகிக்கப்படு கின்றன. மகாசந்நிதானம் ஆவதற்குமுன் சென்னையிலே உள்ள பிரசார நிலையத்தில், தம்பிரான் சுவாமிகளாக அரும்பணி புரிந்தார்கள்.

ஆதீனம், சைவ சமயப் பிரசாரத்தோடு கல்வித்துறையிலும் ஈடுபட்டுள்ளது. ஆரம்பப் பாடசாலை, உயர்தரக் கலாசாலைகளை நடத்துகின்றனர். தேவாரப் பாடசாலையும், ஆகமப்பாடசாலையும் பிரபலமானவை. இங்கு பயின்றவர்கள் வெளித்தலங்களில் ஓதுவார்களாகவும், திருக்கோயில்களில் சிவாசாரியர்களாகவும் விளங்குகின்றனர். திருப்பதி, சென்னை கருமாரியம்மன் கோயில் டில்லி உத்திரசுவாமி மலைக்கோயில்களில் இவ்விதம் பயின்றவர் கள் உள்ளனர். இவர்கள் நடத்தும் தமிழ்க் கல்லூரியிலே வித்துவான் பட்டம் பெற்றவர்கள் பலர். இப்போது பி. லிட்., பட்டம் பெறவும் போதனை உண்டு. வைத்தீசுவரன் கோயிலில் சித்த வைத்தியசாலையும், அனுதை ஆசிரமும் உண்டு. இவர்கள் நடத்தும் அச்சகத்தில் இவர்கள் பத்திரிகை 'ஞானசம்பந்தம்' வெளியிடப்படுகிறது. சைவ சமய நூல்கள் பல ஆதீனத்தால் வெளியிடப்பட்டுள்ளன. ஆதீனத்தில் ஒரு பெரிய நூல்நிலையம் உண்டு. தமிழ், வடமொழி அறிவாளிகளும் மதம், சித்தாந்தம் முதலியவற்றில் பண்டிதர்களும் கௌரவிக்கப் படுகின்றனர்- பள்ளிகள், மதக்கழகங்கள் மருத்துவமனைகளுக்கு பொருள் உதவி அளிக்கப்படுகிறது.

இவற்றிற்கெல்லாம் மேலாக இவர்கள் நிர்வாகத்தில் இருபத்தேழுகோயில்கள்மிகச்சிறப்பாகப்பராமரிக்கப்படுகின்றன சீர்காழி, வைத்தீஸ்வரன்கோயில் திருப்பனந்தாள் ஆலயம். திருபுவனம், திருவையாறு இவைகளில் சில.

சென்னையில் பிரசார நிலையத்தில் தேவார வகுப்புகளும், தமிழ் வித்துவான் வகுப்புகளும் நடைபெறுகின்றன. மாதந் தோறும் வேலூர் ஸ்ரீமுத்துக்குமாரசுவாமி கிருத்திகைப்பிரசாதம் விநியோகம் உண்டு. நவராத்திரி, வருடப்பிறப்பு போன்ற விழாக்கள் உண்டு. ஆதீனப் பிரசுரங்கள் விற்பனை நடைபெறுவதோடு அவரவர்கள் வந்துபடிக்கச் சிறந்தநூல்நிலையமும் உள்ளது. முக்கியமாக, சைவ சமயாசாரியர்கள், சந்தான ஆசாரியர்கள் திருவருட்பேறு எய்தியநாட்கள் கொண்டாட்டம் உண்டு. தற்சமயம் ஸ்ரீ மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் பிரசார நிலையத்தில் அரும்பணி புரிந்துவருகிறார்.

தருமபுரம் மடத்தின் சேவை மகத்தானது. சமயப் பணியோடு சமூகத் துறையிலும் அருந்தொண்டாற்றி வருகின்றது. இதன் மேற்பார்வையில்உள்ள திருக்கோயில்களிலே நடைமுறைகளும் காணப்படும் தப்புரவும் நம்மைக் கவர்கின்றன. இவர்களது பணிக்கு யாதொரு ஊந்தகமும் ஏற்படாது சுயேச்சையாகவும், பொருள் வசதியுடனும் இயங்க விடுவதே உகந்ததாகும். இத்தகைய தெய்வீகத்தொண்டை அறவழியில் நின்று செய்துவரும் தருமபுரம் ஆதீனம் சூரியசந்திரர்கள்போல் எக்காலத்திலும் வாழையடி வழையாக வாழ்ந்துவர இறைவனைப் பிரார்த்திக்கிறோம். —நன்றி—மாலா - தீபாவளி மலர். 1976.

---

## சிறுவர் பகுதி :- உங்கள் திறமைக்கோர் சோதனை !

( வி. சா. கு. )

### விளாம்பழக் கணக்கு

(3) ஒருசிறுவன் நகர்ப்புறத்தில் வியாபாரம்செய்யக் கூடையில் விளாம்பழங்கள் கொண்டுவந்தான். கொண்டுவந்த பழங்களை மக்கள் கொள்ளையடித்துப் போய்விட்டார்கள். சிறுவன் போலீசில் புகார் செய்கிறான். போலீஸ்காரன் சிறுவனிடம் நீ கொண்டுவந்த பழங்கள் எத்தனை என்று கேட்கின்றான். சிறுவன் எத்தனை பழம் என்று எனக்குச் சரியாய்த் தெரியாது. இரண்டாய்ப் பிரித்தால் ஒரு பழம் மிஞ்சும், மூன்றாய்ப் பிரித்தால் இரண்டுபழம் மிஞ்சும், நான்காய்ப் பிரித்தால் மூன்று பழம் மிஞ்சும், ஐந்தாய்ப் பிரித்தால் நாலுபழம் மிஞ்சும், ஆறாய்ப் பிரித்தால் ஐந்துபழம்மிஞ்சும், ஏழாய்ப்பிரித்தால் சரியாயிருக்கும் என்று சொன்னான். சிறுவன் கொண்டுவந்து கொள்ளைபோன பழங்கள் எத்தனை என்று தெரிந்தால் போலீஸ்காரருக்குச் சொல்லி உதவுங்கள். ( விடை அடுத்த இதழில் காண்க. )

# ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி குருபூஜை

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தில் 25 ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியிருந்து 26½ ஆண்டுகள் அருளாட்சி செய்தருளிய ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள் தருமையாதீனவரலாற்றில் பொற்காலங்கண்டவர்கள். ஆதீனத்திற்குட் பட்ட இருபத்தேழு திருக்கோயில்களையும் புதுப்பித்துக் குடமுழுக்குச் செய்வித்தவர்கள். இமயம் முதல் குமரி வரை அவர்கள் தரிசிக்காததலங்களே இல்லை என்னும் அளவிற்குத் தலயாத்திரை செய்தருளியவர்கள். சென்னையில் பிரசார நிலையம் அமைத்தும் பிரசார வாகனங்கள் சமயப்பிரசாரத் துறையில்நிறுவியும்சிறந்தபணிகள் பலவற்றைச் செய்தருளியவர்கள். எல்லாவற்றிற்கும் சிகரமாகக் கயிலை மாமலையைத் திருவருள் வலத்தால் தரிசித்த சிறப்புடையவர்கள், பக்தர்களால் கனகாபிஷேகம் செய்விக்கப்பெற்றுக் 'கயிலைக் குருமணி' எனக் கனிவோடு அழைக்கப்பெற்றவர்கள்.

இவ்விதம் ஞான வள்ளலாக மட்டுமின்றி கல்வி, சமய — சமுதாயப் பணிகளுக்குப் பெருங்கொடை வழங்கியவர்கள். அவர்கள் அறக்கொடை பெறாத துறைகளே இல்லை என்னும் அளவிற்குக் கொடை வள்ளலாகவும் விளங்கியவர்கள். அருள் வெள்ளமாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் திருவருள் அழைப்பின் உணர்வால் 58 ஆவது பிறந்த நாளைக் காசியம்பதியில் கழிக்க விழைந்து அன்பர்களுடன் காசியம்பதி அடைந்த சில மணி நேரத்தில் திருவருள் உணர்வோடு 10—11—71 இல் காலாஷ்டமி தினத்தில் விசுவேசன் திருவடி நிழலில் இரண்டறக் கலந்தருளினார்கள்.

அவர்கள்வழித்தோன்றலாய், தருமையாதீனத்தின்26 ஆவது குருமணியாய் விளங்கும் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணிஅவர்களுக்குத் தருமையாதீனம் ஸ்ரீ ஆனந்தபரவசர் பூங்காவில் காசிவிசுவநாதர் திருக்கோயில் விமான வடிவில் குருமூர்த்த ஆலயம் அமைத்து நித்திய - நைமித்திக வழிபாடுகளைச் சிறப்பாக நிகழ்த்தி வருகின்றார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் பரிபூரணமடைந்த ஐந்தாவது ஆண்டுக் குருபூஜை விழா ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்திருவுளப்பாங்கின்வண்ணம் மேற்படி குருமூர்த்த ஆலயத்தில், விசேஷ அபிஷேக ஆராதனைகள், திருமுறைப்பாராயணம் சொற்பொழிவு நிகழ்ச்சி, நாமாவளிக்கதை முதலியவற்றுடன் 14—11—'76 ஞாயிற்றுக்கிழமை நிகழ்ச்சியிற் காணும்வண்ணம் சிறப்பாக நடைபெறுகிறது. காசியிலும்

இவ்விழா வழக்கம் போல இவ்வாண்டும் சாதுக்களுக்குப் பண்டாரா (அன்னம்பாலிப்பு) முதலியவற்றுடன் குருபூஜை சிறப்பாக நிகழ்கிறது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் நினைவு அறக்கட்டளையின் சார்பில் இக்குருபூஜை விழாவைச் சிறப்புற நிகழ்த்தி வருவதற்கும் கங்கையில் நீராடி விசுவேசனை வழிப்பட்டு வருவதற்கும் காசியாத்திரையாக ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர் ஸ்ரீ குமாரசாமித் தம்பிரான் அவர்களையும் எழுத்தர் என். இராமகிருஷ்ண பிள்ளையையும் அனுப்பிவைக்கப் பெற்றுள்ளது.

## மாயூரம் தெய்வத் தமிழ் மன்றத்தில்
## ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி குருபூசைவிழாவை முன்னிட்டு
## சமய இலக்கியப் பெருவிழா

மாயூரம் தெய்வத் தமிழ் மன்றத்தில் தருமை ஆதீனம் 25வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் குருபூசை விழாவை முன்னிட்டு சமய இலக்கியப் பெருவிழா ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் அறக்கட்டளைச் சார்பில் 13—11—76 சனிக்கிழமைமாலை நிகழ இருக்கிறது. சென்னை திருக்கோயில் ஆசிரியர் தருமையாதீனப் புலவர் திரு. ந. ரா. முருகவேள் அவர்கள் இருபா இருபஃது சாத்திரவிரிவுரையும் மொழிப்பெயர்ப்புத்துறை இயக்குநர் டாக்டர் ஔவை திரு. சு. நடராசன் அவர்கள் சுந்தரர் தேவாரம் பற்றியும் விரிவுரையாற்றுகின்றனர்.

---

## ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியின் பொன்மொழிகள்

ஞானசாரியனே இறைவன் திருவருளை வாரி வழங்கி ஆட்கொள்கிறான். ஆகவே குருவருளும் உயிர்க்கு உற்றதுணையாகிறது. திருவருளும் குருவருளும் உயிரைச் சிவானந்தக் கடலில் திளைக்கச்செய்கின்றன.

* * * *

தமிழ் மொழியே உடல்; சைவமே உயிர்; தமிழ் மொழியே மலர்; சைவமே மணம்; தமிழ் மொழியே வீணை; சைவமே நாதம்; உயிரும், மணமும், நாதமுமாகத் தமிழ் மொழியோடு ஒன்றுபட்டு வளர்ந்துவந்திருக்கிறது நம் சைவ சமயம்; சைவம் இன்றேல் தமிழ் இல்லை. சிவமணமே செந்தமிழைவாழ்விக்கிறது.

# தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப் புலவர், வித்துவான்,
திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,

## 1. திருவாழ்கொளிபுத்தூர்

இத்தலம் சோழவள நாட்டில் காவிரியின் வடகரைத் தலங்களில் 29 ஆவது தலமாக எண்ணப்பெறுவது. மாயூரத்திலிருந்து மணல்மேடு செல்லும் பேருந்தில் சென்றால்இவ்வூரை அடையலாம். நீடூர்ப் புகைவண்டி நிலையத்திலிருந்து வடமேற்கே ஆறுகல் தொலைவில் உள்ளது இவ்வூர்.

இன்று இவ்வூர் திருவாளப்புத்தூர் என வழங்கப்பெறுகிறது. தேவாரத்தில் வாழ்கொளிபுத்தூர் எனவும் தலபுராணத்தில் வாள்ஒளிபுற்றூர் எனவும் கூறப்படுகிறது. வடமொழியில்அரதனபுரம்எனக்கூறப்பெறும். அருச்சுனன் செய்த பூசைக்கு உகந்த பெருமான் அவன் வாளைப் புற்றில் ஒளித்துவைத்திருந்து மீட்டும் அவன் அத்தினபுரி திரும்பும்போது அளித்தார் ஆதலின் வாள்ஒளிபுற்றூர் ஆயிற்று என்பது புராண வரலாறு.

( வாள் ஒளிபுத்தூர் - மிக்க ஒளியை உடைய புதிய ஊர் என்னும் பொருளைத் தருவதாகவும் கூறுவர். )

### கோயிலமைப்பு :

பேருந்து வழியிலிருந்து தெற்குநோக்கிச் சிறிதுதூரம் சென்றால் கோயிலை அடையலாம். பெரிய கிராமம். கோயில் கிழக்கு நோக்கி உள்ளது. கோயிலுக்கு முன்னால் பிரம தீர்த்தம் விளங்குகின்றது. கட்டைக் கோபுர வாயிலைக் கடந்து கோயிலுக்குள் சென்றால் முதல் பிராகாரத்தில் தலமரம் வாகை தழைத்து வளர்ந்துள்ளது. கீழே நாக பிரதிஷ்டைகள் செய்யப் பெற்றுள்ளன. அஷ்டநாகங்களில் வாசுகிக்கோயில் தனியே உள்ளது. பெரிய

பிராகாரத்தை வலம்வந்து நந்தி பலிபீடத்தைக் கடந்து கோயிலுக்குள் நுழையும்போது முன் மண்டபத்தில் அருள்மிகு வண்டமர் பூங்குழல் அம்பாள் சந்நிதி உள்ளது. தெற்கு நோக்கிய சந்நிதி. அம்பாள் கோயிலுக்குத் தனிப்பிராகாரமும் உள்ளது. அம்மையை வழிபட்டுக்கொண்டு உள்ளே செல்லலாம். இரண்டாம்கோபுரம் இராஜகோபுரமாய் எழுந்து விளங்குகின்றது. அதைக் கடந்துஉள்ளே சென்ருல் மகாமண்டபத்தை அடையலாம். இரண்டாம் பிராகாரத்தில் விநாயகர் தக்ஷிணமூர்த்தி, முருகன், திருமகள் கலைமகள் கோயில்கள் விளங்குகின்றன. வடக்குப்பிராகாரத்தில் துர்க்கா தேவிக்குத் தனி மண்டபத்தோடுகூடிய அழகியகோயில் விளங்குகின்றது. வலம்வந்து உள்ளே செல்கிறோம். குருஸ்தானம் என்ற ஊரின் இறைவனும் இறைவியும் பிரதிஷ்டை செய்யப்பெற்ற சிறுகோயில் விளங்குகின்றது. மண்டபத்தில்பஞ்சமூர்த்திகளின் உற்சவ விக்ரகங்கள் விளங்குகின்றன. அர்த்த மண்டபத்தை அடைந்தால் அருள்மிகு மாணிக்கவண்ணரை வழிபடலாம். இறைவன் சந்நிதி அருள் ஒளியோடு அழகுறத்திகழ்கிறது.

## மூர்த்திகள் :

இறைவன் திருப்பெயர் ஸ்ரீ மாணிக்கவண்ணர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் "வாழ்கொளிபுத்தூர் மாணிக்கத்தை மறந்து என் நினைக்கேனே" என இத்திருப்பெயரை ஒவ்வொரு பாடலிலும் எடுத்தாண்டுள்ளார். இறைவி திருப்பெயர் ஸ்ரீ வண்டமர் பூங்குழலி. ஞானசம்பந்தர் இத்தலப் பதிகத்துள் 'வண்டமர்பூங்குழல் மங்கையோர்பாகமாயவன்' என்று குறித்தருளினர். ஸ்ரீ துர்க்கைசந்நிதி சிறப்புடையது. உற்சவ விக்ரகங்களில் பஞ்சமூர்த்திகளும் வாசுகியும் குறிப்பிடத்தக்கன.

தல விருக்ஷம் வாகை. வாகை நுண்டுளிவீசும் வாழ்கொளிபுத்தூருளானே எனத் தலமரம் தேவாரத்தில் குறிக்கப்பட்டுள்ளது. தீர்த்தம் – பிரமதீர்த்தம். திரிசிரபுரம் மகாவித்துவான் திரு. மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பாடிய தலபுராணம் உள்ளது.

இத்தலத்திற்கு ஞானசம்பந்தர் பாடியபதிகம் இரண்டு, சுந்தரர் பாடிய பதிகம் ஒன்று ஆக மூன்று பதிகங்கள் உள்ளன.

### தலப்பெருமை – பிரமன் வழிபட்டது :

இத்தலத்திற்கு இரத்தினபுரம் என்றொரு பெயர் உண்டு நான்முகன் கயிலை மால் வரையை அடைந்து இறைவனைப் பணிந்து செருக்கினால் இழந்த படைப்புத் தொழிலை மீண்டும் அருளுமாறு வேண்டுகின்றான். இறைவன் சோழ நாட்டில் காவிரிக்கரையில் இரத்தினபுரம் என்றொரு தலம் உள்ளது அங்குச்சென்று நம்மை வழிபட்டு நலம் பெறுக எனக் கூறினார். நான்முகனும் இத்தலத்தை அடைந்து தீர்த்தம் உண்டாக்கி அதில் நீராடி மூன்றாண்டு கள் மாணிக்க வண்ணரையும் வண்டுவார்குழலியையும் வழிபட்டு படைத்தல் தொழிலைச்செய்யும் பெரும்பேற்றினைப் பெற்றான்.

### குசகேது வழிபட்டது :

சோழ மன்னர்களில் குசகேது என்ற மன்னன் கோல் நிலை திரிந்து தன்னாட்டில் மழைவளம் குன்றி உயிர்கள் பஞ்சத்தில் அல்லற்படுவதை அறிந்து இத்தலத்தை அடைந்து ஊண் உறக்கம் தவிர்ந்து தவம் செய்தான். இறைவன் இரத்தினலிங்கத்திலின்றும் வெளிவந்து காட்சி கொடுத்தார். ஒருயோசனை இரத்தினமழையாகவும், பத்து யோசனை தூரம் தானியமழையாகவும், நூறுயோசனை தூரம் நீர் மழையாகவும் பொழிவித்தார். குசகேது மிக்க மகிழ்ச்சி யடைந்து இறையருளைப் போற்றினான். மூன்று வரங்கள் இறைவன்பால் வேண்டினான். ஒன்று - கைலை மலையைக் காட்டிலும் இத்தலம் சிறப்படைய வேண்டும். இரண்டு - எக்காலத்தும் இறைவன் இரத்தினலிங்கத்தில் எழுந்தருளி யிருந்து தம்மை வழிபடுவோருக்கு அருள்புரியவேண்டும். மூன்று - தனக்கு முத்திப்பேறு அளிக்கவேண்டும். மன்னன் கேட்ட வரங்களை இறைவன் அவ்வாறே அருள் புரிந்து மறைந்தார். மன்னன் பெரும் பொருள் செலவிட்டு திருக்கோயிற் பணிகள் பலவும் செய்து முத்திப் பேறெய் தினான்.

### துர்க்கை வழிபட்டது :

மகிடாசுரன் என்பவன் எருமைமுகமும் மனித உடலும் படைத்த அரக்கன். இவன் அருந்தவங்கள் பல புரிந்து பெருந் திருவடைந்து விளங்கினான். அரக்கர்கள் பலர்

அவனுக்குத் துணையாயினர். செல்வச் செருக்கால் தருக்கி மகிடாசுரன் எல்லோருக்கும் இடுக்கண் விளைத்தான். தேவர்கள் அனைவரும் இத்தலத்தை அடைந்து இறைவனை வேண்டினர். இறைவன் தமது சக்தியின் ஒரு கூற்றினைத் துர்க்கையாக்கி மகிடனைச் செற்று வருமாறு அனுப்பினர். துர்க்கை அரக்கர் பலரையும் அழித்து முடிவில் கடுமையான சீற்றத்துடன் வந்த மகிடாசுரனைக் கொன்று அவன் தலை மேல் நின்று வீர நடம் புரிந்தாள். துர்க்கை அவனை வெட்டி வீழ்த்திய இடம் இவ்வூரினருகே கடாத்தலைமேடு என வழங்கப்பெறுகிறது. அரக்கர்களைக் கொன்றபழி அம்மையையும் பற்றியது. துர்க்கை இத்தலத்தில் இறைவனை வழிபட்டாள். இறைவன் துர்க்கைக்கு அருள் புரிந்தார். துர்க்கை வழிபட்ட சிறப்பால் துர்க்காபுரம் என்ற பெயரை இத்தலம் பெற்றது; துர்க்கையைத்தரிசித்த பின்னரே இத்தலத்தைத் தரிசித்த பயன் நமக்குக் கிடைக்கும் எனத் தலபுராணம் கூறுகிறது.

## வாசுகி வழிபட்டது :

இவ்வுலகினைச் சுமக்கும் அட்டநாகங்களில் ஒன்று வாசுகி. தேவாசுரர்கள் திருப்பாற்கடலில் அமுதம் கடைந்த காலத்து மந்தர மலையை மத்தாகவும் இவ்வாசுகியையே கயிறாகவும் கொண்டனர். அவ்வாசுகி இறைவனுக்குத்தான் அணிகலனாக வேண்டுமென விரும்பி இத்தலத்தை அடைந்து இறைவனை வழிபட்டது. இறைவன் வாசுகிக்காகப் புற்றிடங் கொண்ட பெருமானானான். அவ்வாசுகியின் அன்பிற்கிரங்கி வாசுகியைத் தன் புயத்தில் அணிந்து அருள் புரிந்தான். வாசுகி வழிபட்ட இடம் தலமரத்தின் அடியில் தனியே விளங்குகின்றது. அதனை வலம் வந்து வழுத்துவார் நினையும் நலங்கள் பலவும் எய்தப் பெறுவர் எனத் தலபுராணம் கூறுகிறது.

## அருச்சுனன் வாளைப்புற்றில் ஒளித்தது :

குருநாட்டு அத்தினபுரத்தில் அரசாண்ட பாண்டுவின் மைந்தர் பாண்டவர்கள். அவர்கள் பாஞ்சாலநாட்டு மகள் திரௌபதியை மணம்புரிந்து ஒவ்வொருவரும் ஒவ்வோராண்டுஅளவு பாஞ்சாலியை மனைவியாக்கிக்கொண்டு வாழ்ந்தனர். தருமன் பாஞ்சாலியோடு உடனுறையும் காலத்தில் பார்த்த குற்றம் தவிர்தற்காக அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை மேற்கொண்டான். பல தலங்களையும்

வணங்கிக்கொண்டு இத்தலத்தை அடைந்தான். கடுங் கோடைக்காலம். தண்ணீர் வேட்கையால் இடருற்றான். மாணிக்க வண்ணரைத் தியானித்தான். இறைவன் முதிய வேதியர் வடிவில் வந்தார் விசயன் அவரை இன்னார் என அறியாது தன்னை அவருக்கு அறிமுகம் செய்துகொண்டான் நீர் வேட்கையைத் தெரிவித்தான். தன் பின்னே வருமாறு அருச்சுனனை அழைத்துச்சென்று ஒரு வாகை மரத்தடியில் நின்று கதாயுதம் ஒன்றை அவன் கையில் கொடுத்து அதனை ஊன்றிய இடத்தில் தண்ணீர்வரும் அருந்துக என்று அருளினார். விசயன் தன்னிடமிருந்த வாளை வேதியரிடம் கொடுத்து தண்ணீர் அருந்தி வரும்வரைப் பாதுகாத்திடுக எனக் கூறிச் சென்றான். இறைவன் வாளை வாகை மரத்தடியில் இருந்த புற்றில் மறைத்து வைத்து விட்டு மறைந்தார். இறைவன் கூறியபடிச் செய்து நீரருந்தித் திரும்பிய விசயன் தான் கொடுத்த வாளையும் வேதியரையும் காணாது வருந்தி இறைவனிடம் முறை யிட்டான். இறைவன் நாமே இவ்விளையாடலைப்புரிந்தோம் வாளைப் புற்றில் ஒளித்து வைத்துள்ளோம் எடுத்துச்செல்க என அருள் புரிந்தார். அருச்சுனனும் அவ்வாறே தன் வாளைப் பெற்று மகிழ்ந்து வணங்கிச் சென்றான்.

மற்றும் திருமால், இந்திரன், துர்வாசர் அஞ்சகேது விப்ரவணிகன் முதலியோர் இத்தலத்திறைவனை வழிபட்டு அருள் பெற்றுள்ளனர்.

## 2. திருப்பழமண்ணிப்படிக்கரை

சோழ வளநாட்டில் காவிரியாற்றின் வடகரையில் 30 வது தலமாக விளங்குவது இது. சுந்தரமூர்த்தி சுவாமி களால் இத்தலம் பழமண்ணிப்படிக்கரை என்று போற்றப் பெற்றுள்ளது. திருவாவடுதுறை ஆதீன அருளாட்சிக்கு உட்பட்டது.

மாயூரம் தாலுகா மணல்மேடு செல்லும் பேருந்தில் சென்று மணல்மேடு காவல் நிலையத்தினருகில் செல்லும் பாப்பாகுடி வழியில் வடக்கே 1 மைல் சென்றால் இத் தலத்தினை அடையலாம்.

பண்டைக்காலத்தில் மண்ணியாற்றின் படிக்கரையி லிருந்தமையால் இத்தலம் மண்ணிப்படிக்கரைஎன வழங்கப் பெறுகிறது. கோயிலுக்கு மிக அருகே ஓடிய மண்ணியாறு

பல நூற்றுண்டுகளுக்கு முன்னே ஒதுக்கி வெட்டிவிடப்பட்டிருக்க வேண்டும். சுந்தரர் காலத்துக்கு முன்பே இந்நிகழ்ச்சி நடைபெற்றிருக்க வேண்டும் என்றும் அதனுல் தான் சுந்தரர் பழமண்ணிப்படிக்கரை எனக் கூறியுள்ளார் என்றும் இத்தலபுராணத்தின் முன்னுரையில் டாக்டர் உ. வே. சா. அவர்கள் குறித்துள்ளார்கள். தலவிருக்ஷம் இலுப்பை மரம் ஆதலின் இலுப்பைப்பட்டு என இத்தலம் வழங்கப்படுகிறது.

## மூர்த்திகள் :

பஞ்சபாண்டவர்வழிபட்டதாதலின் இத்திருக்கோயிலில் ஐந்து சிவலிங்கத்திருவுருவங்கள் உள்ளன. இறைவன் திருப்பெயர் அருள்மிகு நீலகண்டேசுவரர், இறைவி திருப்பெயர் அருள்மிகு அமுதகரவல்லி, சுந்தரமூர்த்திசுவாமிகள் இத்தலப்பதிகத்தில் திருநீலமிடற்றெம்பிரான் என இறைவன் திருப்பெயரைக்குறித்துள்ளார். இவர்தருமன்வழிபட்ட மூர்த்தியாவார். அர்ச்சுனன் வழிபட்ட இறைவன் திருப்பெயர் அருள்மிகு படிக்கரை நாதர் என்பதாகும். இறைவி திருப்பெயர் மங்கலநாயகி. இவ்விரு சிவலிங்கத்திருவுருவங்களைக் கொண்டுள்ள கோயில்கள் தனித்தனியே பரிவார தெய்வங்களோடு திகழ்கின்றன. மற்றும் பீமன் பூசித்த மகதீசர், நகுலன் பூசித்த பரமேசர், சகாதேவன் பூசித்த முத்தீசர் கோயில்களும் உள்ளன. இத்தலம் வடமொழியில் மதூகவனம் என வழங்கப்படும். தல விருட்சம் இலுப்பை, தீர்த்தங்கள் - பிரமதீர்த்தம், மண்ணியாறு கொள்ளிடம் ஆகியவை. வழிபட்டுப் பேறுபெற்றோர் பிரமதேவன் பஞ்சபாண்டவர் முதலியோர் ஆவர்.

## கோயிலமைப்பு :

கிழக்கு நோக்கிய திருக்கோயில்; எதிரே பிரமதீர்த்தம் அமைந்துள்ளது. தீர்த்தக்கரையில் சிறிய விநாயகர்கோயில் உள்ளது. இராஜகோபுரத்தைக்கடந்து உள்ளே சென்றதும் இடது பக்கத்தில் கோயிலின் நிருதிமூலையில் தல விருட்சம் விரிந்து பரந்து உயர்ந்துள்ளது. கோயில் அழகிய அமைப்போடு ஐந்து அடி உயரமுள்ள பெரிய மேடையில் அமைந்துள்ளது. தெற்குப் பிராகாரத்தின் தென்பகுதியில் நந்தவனம் உள்ளது. பீமன் வழிபட்ட முத்தீசர்கோயிலும் உள்ளது. வலம்புரி விநாயகர், நடன

விநாயகர் என இரண்டு விநாயகர்கள் இத்தலத்துக்குரிய வராக விளங்குகின்றனர். மேற்குப்பிராகாரத்தில் அம்பாள் அருள்மிகு அமிர்தகரவல்லியன்னையின் தெற்குநோக்கிய திருக்கோயில் திகழ்கிறது. கையில் அமுத பாத்திரத்துடன் இறைவன் உண்ட நஞ்சினைக் கண்டத்தில் நிறுத்தி அதனை அமுதமாக மாற்றிய அம்மை இவர். மகாலக்ஷ்மி முருகன் திருக்கோயில்களும் நகுலன் வழிபட்ட பரமேசர் கோயிலும் விளங்குகின்றன, வடக்குப் பிராகாரத்தில் முருகன்கோயில் கிழக்குநோக்கி விளங்குகிறது. மேடையில் ஏறியதும் அருச்சுனன் வழிபட்ட மண்ணிப்படிக்கரை நாதர் தனி ஆலயத்தில் பரிவார தெய்வங்களுடன் விளங்குகின்றார். அதை அடுத்துப் பின்னால் சகதேவன் வழிபட்ட மகதீசர் கோயில் விளங்குகிறது. அடுத்து தருமர் வழிபட்ட அருள்மிகு நீலகண்டேசர் விளங்குகின்றார்.

பஞ்சமூர்த்திகள் நடராஜர் திருவுருவங்கள் பலவும் அழகுறத் திகழ்கின்றன.

## புராண வரலாறுகள் :

இத்தலத்திற்கு மகாவித்துவான், மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பாடிய தலபுராணம் உள்ளது. இத் தலத்தைப் பற்றிய பெருமைகளை அந்நூலில் நன்கறியலாம்.

## இலுப்பைமரச் சிறப்பு :

ஊழிக்காலத்தில் இறைவன், விநாயகர் முருகன் உமையம்மை நந்தி கணத்தவருடன் பூமியைத் தோணியாக அமைத்து அதில் ஏறிச் செலுத்தினர். கொள்ளிடம் காவிரி ஆகிய இரண்டு ஆறுகளுக்கு இடையில் மண்ணிக்கரையருகில் தோணியை நிறுத்தினர். இலுப்பைக்கிளை ஒன்று வெள்ளத்தில் மிதந்தது. உமையம்மையார் அக்கிளையினை யாதென வினவினர். இறைவன் இத்தலத்தின் சிறப்புகளையும் தலமரமாகிய இலுப்பையின் பெருமைகளையும் கூறினர். அம்மையார் இத்தலத்தில் நாம் எழுந்தருளியிருந்து நம்மை வழிபடுவோர்க்கு எல்லா நன்மைகளையும் அருள் செய்வோம் என்றார். இறைவனும் அதற்குடன்பட்டார். விநாயகர் மகிழ்ச்சியால் நடனமாடினர். இலுப்பைமரம் என்னுடைய நெய்யினால் தீபம் இடுவோருக்கு நன்மைகள் பலவும் தந்தருளுமாறு பிரார்த்தித்தது. இறைவனும் அதற்கு அருள்புரிந்து இத்தலத்தின்கண் எழுந்தருளினர்.

### பிரம தீர்த்தச் சிறப்பு :

படைப்புத் தொழிலைச் செய்யும் நான்முகன் செருக்குக் கொண்ட காரணத்தினால் அத்தொழில் அவரை விட்டகன்றது. திருமாலிடம் சென்று முறையிட்டார். திருமால் 'இத்தலத்தின் பெருமைகளை எடுத்துக்கூறி, அங்குச் சென்று வழிபட்டால் இறைவன் மீளவும் அருள்புரிவான்' என்றார். நான்முகன் அவர் கூறியவாறு இத்தலத்துக்கு வந்து தன் பெயரால் பிரம தீர்த்தத்தை உண்டாக்கி அதில் நீராடி நாடோறும் இறைவனை வழிபட்டு வந்தார். சித்திரா பௌர்ணமியன்று இறைவன் வெளிப்பட்டுப் பிரமனுக்கு அருள்செய்தார். இன்றும் இத்திருநாளில் இத்திருக்குளத்தில் நீராடினோர்எல்லா நன்மைகளையும்பெற்றுவருகின்றனர்.

### இந்திரன் :

இந்திரன், விருத்திராசுரனைக் கொன்ற பாவத்தினால் பிரமகத்தி தொடரப் பெரிதும் துன்புற்று, நாரதர் ஆணையால் இத்தலத்தை அடைந்து, பிரம தீர்த்தத்தில் நீராடி பிரமகத்தி நீங்கப்பெற்று இந்திர உலகம் சென்றான்.

### விபாண்டகர் :

விபாண்டகமுனிவர் இங்குவந்து பிரம தீர்த்தத்தில் நீராடி, தானம் செய்தற்குத் தான் கொண்டுவந்த கோதுமையைப் பக்கத்தில்வைத்துவிட்டுத்தீர்த்தக்கரையில் ஜபம் செய்தார். பெருச்சாளி ஒன்று அக்கோதுமையைக் கொறித்தது. முனிவர் கமண்டலத்தில் இருந்தநீரை அதன் மீது தெளித்து விரட்டினார் அது தெய்வ வடிவம் பெற்றுச் சிவலோகம் சென்றது. முனிவர் ஞான நோக்கினால் பெருச்சாளியாக வந்தவன் வீரபாதன் என்பதையும் பாரத்வாச கோத்திரத்தில் பிறந்து பிறர் மனை விழைந்த குற்றத்தினால் பெருச்சாளியாயினான் என்பதையும் பிரம தீர்த்த விசேடத்தினால் அப்பாவம் நீங்கித் தெய்வ உருப் பெற்றான் என்பதையும் அறிந்து வியந்தார்.

### துந்து, நளன் :

துந்து என்ற கந்தருவன் ஒரு முனிவரைப் பழித்த குற்றத்திற்காகக் குட்டநோயடைந்து அம்முனிவர் ஆணைப் படி இத்தலத்தை அடைந்து பிரமதீர்த்தத்தில் நீராடி படிக்

கரை நாதரை வழிபட்டு நோய் நீங்கப்பெற்ருன். நளமகா ராசனும் இந்தப் பிரம தீர்த்தத்தில் நீராடி கலி நீங்கப் பெற்றனன்.

பஞ்சலிங்க மூர்த்தி :

குருக்ஷேத்திரத்தில் அத்தினபுரியை ஆண்டுவந்த மன்னர்களில் திருதராட்டின் மைந்தர் துரியோதனுதியர். பாண்டுவின் மைந்தர் பாண்டவர். பாண்டவர் துரியோதன ஞேடு சூதாடி நாடு நகரங்களை இழந்தனர்; காட்டில் வசித் தனர். உரோமச முனிவர் அவர்கள் முறையிட்டைக் கேட்டு வருந்தினர்; சிவபூசை செய்தால் துன்ப நீக்கமும் இன்பப் பேறும் கிடைக்கும் என்று கூறினர். இத்தலத்தின் சிறப்புக் களை எடுத்துரைத்தார். அம்முனிவர் ஆணைப்படிப் பாண்ட வர்கள் மண்ணிப் படிக்கரையை அடைந்தனர். பிரம தீர்த் தத்தில் நீராடி அத்தலத்தில் உள்ள ஐந்து சிவலிங்கங் களையும் வழிபட்டனர்.

தருமன் — நீலகண்டேசர் - அமிர்தவல்லி.
பீமன் — மகதீசர்.
அர்ச்சுனன் — படிக்கரை நாதர் - மங்கலநாயகி.
நகுலன் — பரமேசர்.
சகாதேவன் — முத்தீசர்.
திரௌபதி — வலம்புரி விநாயகர்.

இவர்கள் இவ்வாறு பூசை செய்வதை அறிந்த துரியோதனன் பாண்டவர்கள் நீராடி அருந்தும் பிரம தீர்த்தத்தை இராப்போதில் நஞ்சுகலந்து நச்சுப்பொய்கை யாக்கிஞன். உமையம்மையார் இறைவனிடம் விண்ணப் பித்தார். இறைவன், 'அடியார்களுக்கு நஞ்சும் அமுத மாகும்' என்று கூறி 'தூயதண்ணீரில் கலந்த நஞ்சு அமுதமாகுமாறு அருள் புரிவோம் கவலற்க' என்ருர். பாண்டவர்கள் மறுநாள் நீராடச் சென்று தண்ணீரைக் கண்டு ஐயுற்றனர். இறைவன் அசரீரியாக 'நிகழ்ந்ததை அறிவித்து அஞ்சற்க' என்றருள்செய்தார். அது முதல் அத்தீர்த்தம் நச்சுப் பொய்கை எனவும் பெயர் பெற்றது. சித்திரா பௌர்ணிமை யன்று பாண்டவர்க்குக் காட்சி கொடுத்து அருள் வழங்கினன் பெருமான். தங்கள் நாடடைந்து அரசுபெற்ற பாண்டவர் மீண்டும்இங்குவந்து தாங்கள் வழிபட்ட கோயிலைத் திருப்பணிசெய்து விழா நிகழ்த்தி வழிபட்டுச்சென்றனர்.

காசிபகோத்திரத்தில் பிறந்து பஞ்சமாபாதகங்களைச் செய்து கபிலன்காக்கையுருப்பெற்றான். புண்ணியவரத்தால் காக்கை இத்தலத்தை அடைந்தது. நெய்யுண்ணுவதற்காகச் சிவசந்நிதியில் இருந்த அகலில் மூக்கை வைத்தது. அணையும் நிலையில் இருந்த விளக்குச் சுடர் விட்டுப் பிரகாசித்தது. இறைவன் அதற்குச் சிவஞானம் விளங்குமாறு அருள்செய்தார்.

கருமசேனன் மாந்தாதா முதலியோரும் இத்தலத்து இறைவனை வழிபட்டு அருள்பெற்றுள்ளனர்.

### கல்வெட்டு வரலாறு :

இத்திருக்கோயிலில் விசயநகர வேந்தர்களில் மகாமண்டலேஸ்வரன் வீர பூபதி உடையார் வீரப்பிரதாப கிருஷ்ணதேவ மகாராயர் காலங்களில் செதுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவைகளன்றிக் கிரந்தத்தில் செதுக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றும் உண்டு. இவைகளுள் வீரபூபதி உடையார் கல்வெட்டு, சகம் 1330 அதாவது கி. பி. 1408 இல் ஏற்பட்டதாகும். இக் கல்வெட்டில் இறைவரின் திருப்பெயர் திருநீலகண்டம்உடைய நாயனார் என்று குறிக்கப்பட்டுள்ளது. இம்மன்னன் இத்திருநீலகண்டமுடைய நாயனார்க்குத் திருவமுது உள்ளிட்டவைகளுக்கு, சர்வமான்யமாக நிலம் அளித்துள்ளான். இம் மண்ணிப்படிக்கரை, விருதராஜ பயங்கர வளநாட்டு, இராஜராஜ வளநாட்டு, திருப்படிக்கரை என்று குறிக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில்உள்ள பரமேஸ்வரம்உடையார் விசுவேசுரம் உடைய நாயனார் இவர்கள் திருமேனிகளையும் இக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இக்கோயிலில் திருவிழா நடாத்திய ஒரு வேளாளரைப் புகழ்ந்து பாடல்கள் செதுக்கப்பட்டுள்ளன. விழாக் காலங்களில் சந்திரசேகரப் பெருமானைப் புறப்பாடு செய்வதைப்பற்றி மற்றொரு கல்வெட்டு அறிவிக்கின்றது.

---

### குருமணியின் அருள்மொழி

அறிவுக்கு முதலிடம் கொடுக்கக்கூடாது; அன்புக்குத் தான் முதலிடம் கொடுக்கவேண்டும் ; தந்தையிடம் கட்டுப் படாத மகன் தாயிடம் கட்டுப்படுகிறான். இதிலிருந்தே அறிவைவிட அன்பு மேலானது என்று புரியவில்லையா ?

# "தேனூறு செஞ்சொல் திருக்கோவை"

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

**திரு. ந. ரா. முருகவேள் M, A., M. O. L.,**

> " எண்ணிறைந்த தில்லை எழுகோ புரம்திகழக்
> கண்ணிறைந்து நின்றருளும் கற்பகமே! - நண்ணியசீர்த்
> தேனூறு செஞ்சொல் திருக்கோவை என்கின்ற
> நானூறும் என்மனத்தே நல்கு "

**முன்னுரை :**

திருவாசகம். திருக்கோவை என்னும் இருபெரு நூல்களும், மாணிக்கவாசகப் பெருமானாரால் அருளிச்செய்யப் பெற்றனவாகும். திருவாசகத்தினை மாணிக்கவாசகர் அருளிச்செய்தார் என்பதனை மட்டும் பெரும்பாலோர் அறிவர். ஆனால் அவரே திருக்கோவை என்னும் பிறிதொரு நூலையும் அருளிச்செய்துள்ளார் என்பது, நம்மில் மிகப்பெரும்பாலோர்க்குத் தெரியாது. 'திருக்கோவையினை இயற்றியவர் மாணிக்கவாசகர் அல்லர், அதனைச் 'சிவபாத்தியன்' எனப் பெயரிய வேறு பிறர் எவரோ இயற்றினராதல் வேண்டும்' எனக்கூறுவோரும் சிலர் உண்டு. இதனால் திருக்கோவை பற்றி எத்துணையளவுக்கு மக்கள் ஏதும் தெரிந்து கொள்ளாமல் இருக்கின்றனர் என்பது புலனாகும். திருக்கோவையினைத் திருக்கோவையார் எனவும், திருச்சிற்றம்பலக் கோவையார் எனவும் சான்றோர்கள் போற்றி வழங்குவர்.

**திருவாசகமும் திருக்கோவையாரும் :**

1. திருவாசகம் திருக்கோவையார் என்னும் இரு பெரு நூல்களும் நம் தமிழ்மொழிக்கண் உள்ள அரும்பெறல் நூல்களுள் முதன்மைச் சிறப்பிடம் பெறுதற்குரியனவாய்ப் புகழ் வாய்ந்து திகழ்வனவாகும்.

2. திருவாசகம் மாணிக்கவாசகரது அயரா அன்பின் திறனை விளக்குகின்றது. திருக்கோவையார் அவர்தம் அரிய புலமையறிவின் பெற்றியினைத் திறம்படப் புலப்படுத்துகின்றது.

3. சிவபெருமானின் அருள் நலங்களைப் புகழ்ந்து பாடிப் போற்றுகின்றது திருவாசகம். நமதருமைச் செந்தமிழ் மொழியின் சீரிய அகப்பொருள் இலக்கணங்களைத் திறம்படத் தெளித்துணர்த்தித் தேற்றுகின்றது திருக்கோவையார்.

4. மாணிக்கவாசகப் பெருமானின் சிவானுபவ நலங்களைத் திருவாசகத்தால் உணரலாம். அவர்தம் அளப்பரிய செந்தமிழ்ப் புலமை நலத்தின் சிறப்பினைத் திருக்கோவையார் நமக்குத் தெள்ளிதிற் புலன் படுத்தும்.

5. திருவாசகம் சிவநெறித் திருநூல்; திருக்கோவையார் செந்தமிழ் மொழிப் பெருநூல்; திருவாசகம் தெவிட்டாத தேனை யொத்த சிறப்பினதெனின் திருக்கோவையார் அத்தேனிடையூறிய தெய்வநலம் சிறந்த செந்தமிழ் அமிழ்தம்போல்வதாகும்.

6. திருவாசகம் திருக்கோவையார் என்னும் இவ்விரண்டும், சங்ககால இலக்கியங்களுக்கும் பிற்கால நூல்களுக்கும் இடையே ஓர் எல்லைக்கல் போல விளங்கும் மேம்பாடு உடையன.

7: பிற்காலக் கவிதை வகைகள் பலவும் தோன்றுதற்கு வழி வகுத்துக் காட்டிய கழிபெருஞ் சிறப்பினவாய் முற்காலச் சங்கத் தொகை நூல்களின் பிழிவாய், அவற்றினின்றும் ஓரளவு வேறு பட்ட பொருளும் போக்கும் நடையும் அமைப்பும் உடையனவாய், புதுமையும் பழமையும் பொருந்தக் கலந்து, பொலிவும் வளமும் மிக்கு இணையற்றமாட்சிமையவாய் திருவாசகம் திருக்கோவையார் என்னும் இவ்விரண்டும் விற்றுயர்ந்து விளங்குகின்றன. இவற்றின் சிறப்பினையெல்லாம் முற்ற எடுத்து மொழிதல் எத்தகை யோர்க்கும் இயல்வதன்று.

## திருக்கோவையாரின் சிறப்பியற் பண்பு:

"தேனூறு செஞ்சொல் திருக்கோவை" என்னும் இந்நூலுக்கு, எத்தனையோ பலதிறப்பெருஞ் சிறப்புக்கள் உண்டு: அவைகளுள் ஒன்று பற்றி மட்டும் ஈண்டு விளக்குதல் சாலும் : சங்க காலத்து நல்லிசைப் புலவர் பெருமக்களில் ஒப்புயர்வற்ற சான்றாண்மைப் பண்புநலங்களையெல்லாம் ஓரளவேனும் நாம் நன்கினிதுணரப் பெற்றுள்ளோம். அளப்பருஞ் சிறப்பையுடைய சங்ககால நல்லிசைப்புலவர் பெருமக்கள் எல்லோரும் விரிந்து பரந்து விளங்கும் இவ்வுலகினையும், இவ்வுலகின்கண் வேறு வேறு உருவும், வேறு வேறு இயற்கையும் வாய்ந்து திகழும் எண்ணற்ற பலதிற உலகியற் புறப்பொருள்களையும், அவற்றின் அடிப்படையாகவும் விளைவாகவும் மனித மனத்தின்கண் எழூம் உலப்பிலா உள்ளுணர்ச்சிகளையும், தெள்ளிதின் உணர்ந்து, கலை நலம் எல்லாம் கனியச் செழும் பொருட் பாடல்களாகத் திறம்பட வெளியிட்டருளியுள்ளனர். அவர்தம் அவ்வருமைத்திறம் சாலவும் பெருகிச் சிறந்தது என்பதில் ஐயமில்லை.

ஆயினும், அவர்தம் அளவிலடங்காக் கவிதை யனுபவ உணர்ச்சிகள் அனைத்தும், நம்மனோரின் ஐம்பொறியனுபவ

அளவிற்குட்பட்டு அடங்கிவிடும் இயல்பினவேயாம். மற்று நம் மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம் செழும் பாடல்களின்கண் வெளிப்படும் மிக மேலான தூய சிவானுபவ நிகழ்வின் உணர்ச்சிகளோ, 'பூண்ட ஐம்புலனிற் புலப்படா இன்பம் புணர்ந்து மெய்யுணர்வினிற் பொங்கும்' உணர்ச்சிகளாகும்; சுருங்கக் கூறல்வேண்டின் சங்கச் சான்றோர்கள் ஐம்பொறி யளவில் புலப்படக்கூடிய உலகியல் உணர்ச்சிகளையே பெரும்பாலும் பாடிச்சென்றனராக, மாணிக்கவாசகர் ஐம்பொறியளவிற்குட்படாமல் ஓங்கும் கடவுளருளின்பப் பேருணர்ச்சிகளைப்பாடி விளக்கினர் எனலாம்.

இங்ஙனம், தாம் ஒருவர் மட்டுமே தம் தனி நிலையில் நுகர்ந்திருந்த ஐம்பொறியளவிற் புலப்படாச்செம்பொருள் அருளனுபவ நல இன்ப உணர்ச்சிகளை, அவை இயல்பாகத் தாமே தம் உள்ளத்திற் பொங்கியெழுந்து வழிந்தவாறு, திருவாசகமாகத் திருவாய் மலர்ந்த மாணிக்கவாசகர், அக்கடவுள் அருளின்ப நல உணர்ச்சிகளை, ஏனைய மக்களாயினார்க் கெல்லாமும் எடுத்துரைத்துணர்த்தி, 'யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற நிலையில் அவர் தம்மையும் அப்பேரின்ப நலம் தலைப்படுமாறு செய்வித்தற் பொருட்டுப் "பெற்ற பெருவளம் பெறுஅர்க்கு அறிவுறிஇச்சென்று பயன் எதிரச் சொன்ன பக்கம்" போல பல்லாற்றானும் நினைந்து தெளிந்து புனைந்து, "மனத்தின் எண்ணி மாசறத் தெரிந்துகொண்டு, இலைத்திற்சேர்த்தி உணர்த்தல் வேண்டும்" என்ற முறையில் இயற்றிய நூலே, திருக்கோவையார் ஆகும்.

## திருக்கோவையாரின் சிறந்த புது விளக்கம் :

திருக்கோவையாரின்கண், மாணிக்கவாசகர் தாம் பெற்ற ஐம்பொறியளவின் மேம்பட்ட தூய கடவுளருளனுபவப் பேரின்ப உணர்ச்சிகளை, நம்மனோர் எளிய இனிய முவறயில் உணர்தற் பொருட்டு, நமக்குக் கைவந்த "கண்டு கேட்டு உண்டுயிர்த் துற்றறியும்" காதலின்ப அனுபவ உணர்ச்சி நிலையின்கண் வைத்து விளக்கியருளியுள்ளார். இங்ஙனம் கடவுளின்ப நலத்தின் பெற்றியினைக், காதலின்ப நலத்திைேடு ஏற்ற பெற்றி இயைத்து விளக்கும் திருக்கோவையாரின் சிறப்பியற் பண்பொன்றுமே, நம்மை மெய்சிலிர்த்து விம்மிதமுறச் செய்யப் போதியதாகின்றது.

திருக்கோவையார் ஒன்றில்தான், முதன் முதலாக இத்தகைய அழகிய புதியதொரு சிறந்த விளக்கத்தினை, நாம் காண்கின்றோம்! மாணிக்கவாசகர்க்கு முன்னரும் பின்னரும் எத்துணையோ பல புலவர்களும் சான்றோர்களும், காதலின்ப

நலத்தையும், கடவுளின்ப நலத்தையும் பற்றிப் பாடியுள்ளனராயினும், அவர்களெல்லாரும், நம்மருமை மாணிக்கவாசகப் பெருமானைப் போல, "பேதையைக் காதல் காட்டிக் கைவிடுக்க" என்னும் நுட்பம் அறிந்து "கடுந்தின்னுநானைக் கட்டி பூசிக் கடுந் தீற்றுமாறு போலக்" காதலின்ப நலத்தையும், கடவுளின்ப நலத்தையும் ஒன்றுசேர்த்து ஒருங்கியைத்துப்பாடி, நம்மனோர்க்கு உயர்வுநெறி விளக்கி உணர்வு கொளுத்தக் காண்கின்றிலம்.

மாணிக்கவாசகரின் "தேனூறு செஞ்சொல் திருக்கோவை" நூல் ஒன்றுதான், நம்மனோர் நலங்கருதி இத்தகைய வித்தகச் செயலை, முதன்முதற் புதிது புரிந்து வழி காட்டியுள்ளது.

"காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களோடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

எனவரும் தொல்காப்பிய நூற்பா, "காதலின்ப வாழ்வின் பயன் கடவுளின்ப வாழ்வினை அடைய முயலும் படிநிலைப் பயிற்சியாதலேயாகும்" என்று மிக நுண்ணியதாகக் குறித்த அரிய கருத்தினை, உரிய முறையில் விரிவாக எடுத்துத் தொடுத்துத் தெளிவுற முழுவதாக விளக்கிய பெருஞ்சிறப்பு, மாணிக்க வாசகர்க்கும், அவர் அருளிச்செய்த திருக்கோவையார்க்குமே உரியதாகும்.

**சிறப்பிலக்கியம் :**

" உலகியற்கைப் பொருள்களில் பரிணமக் கொள்கையின்படி முதன்முதலாகத் தோன்றிய பொருள்களைவிட, நாளடைவாகப் படிப்படியே தோன்றும் பொருள்களே மேன்மேல் உயர்ந்து, வளர்ச்சியுற்றுச் சிறந்து திகழக் காண்கின்றேம். ஆனல் இப் பரிணமக்கொள்கையானது, இலக்கியங்களைப் பொறுத்தவரையில் பொருந்துவதாகத் தோன்றவில்லை. மிகச் சிறந்த இலக்கியங்களெல்லாம் துடுமெனத் தாமே முதன் முதலாகத் தோன்றுகின்றன; ஒப்புயர்வற்று விளங்குகின்றன. ஒரே ஒரு முறை மட்டுமே தோன்றும் அச் சிறப்பிலக்கியங்களுக்கு அருகே நிற்கத் தக்க நிலையிற்கூட, அவற்றிற்குப் பின்னர்ப் படிப்படியே காலப் போக்கில் தோன்றும் இலக்கியங்கள் தகுதி பெறுவதில்லை" என டாக்டர். ஐ. ஏ. ரிச்சர்ட்ஸ் ‡ என்னும் புகழ்பெற்ற அமெரிக்க

‡ " Here is a very old thing. In literature the best in each kind comes first, comes suddenly and never comes again. This is a disturbing uncomfortable, unacceptable idea to people who take their doctrine of evolution over simply. But

நாட்டுப் பேரறிஞர், தம்முடைய இலக்கியத் திறனுய்வின்கண் குறிப்பிடுகின்ருர். அது, நம்முடைய திருக்கோவையார்க்கு மிக மிகப் பொருந்திய தொன்ருகக் காணப்படுகின்றது.

இன்று தமிழில் எத்துணையோ பலப்பல கோவை நூல்கள் பாடப்பெற்றிருக்கின்றன. எனினும், அவைகள் எல்லாவற்றுள் ளும் மிக்க பழமையும் முதன்மையும் பெருமையும் மிகுத்திகழ்வது, திருச்சிற்றம்பலக்கோவையார் ஒன்றேயாகும். இதனைத் 'திருக் கோவையார் எனவும் சுருக்கமாக அறிஞர்கள் வழங்குவர்.

திருக்கோவையார்தான், இன்றுள்ள எல்லாக் கோவை நூல் களுக்கும் முதன்முதலில் தோன்றியது; பிறவற்றிற்கெல்லாம் அதுவே அடிப்படையும், வழிகாட்டியும், மேல்வரிச்சட்டமும் (Model) ஆக அமைந்தது. கோவை நூல்களின் வரிசையில், பழமையும் பெருமையும் மிக்க அருமைப்பாடு உடையதாய், ஈடும் எடுப்பும் அற்று விளங்குவது 'திருக்கோவையார்' என்பதனை, அறிஞர்கள் அனைவரும் இனிது உடன்பட்டுப் போற்றி மகிழ்வர்.

ஞானப்பனுவல் :

திருச்சிற்றம்பலக் கோவையார்க்குப் பலவகைச் சிறப்புகள் உண்டு. அவைகளுள் மிகவும் தலையாயது, சங்ககாலப் புலவர்கள் பாடிய அகப்பொருள் ஆகிய உடலில், இறையியல் இன்பக் கருத்துக்கள் ஆகிய ஆன்மிக அருட்பொருளையும் பிரிவறவிரவிப் பிணைத்திணைத்து, அழியா இன்ப அருங்கலைக் கவிதை இலக்கிய எழிற்படைப்பாகக் கவின்மிக்குத் திகழ்தலேயாகும். பௌத்தரும் சமணரும் ஆகிய புறச்சமயத்தோர் சமுதாய வளர்ச்சிக்கு இன்றியமையாததும் மிகினும் குறைமினும் ஏதம் விளைவிப்பதும் ஆகிய காம உணர்வினைப் பெரிதும் கடிந்திகழ்ந்து, துறவு நெறியினையே வற்புறுத்தி வந்தனராக, அதனை மறுத்துக் "காமம் காமம் என்ப, காமம் அணங்கும்பிணியும் அன்றே" என விளக்கி, அவ்வுணர்வினைத் தெய்விகச் செவ்வுணர்வாக்கும் அருளியல் நெறியினை (Spiritualisation & sulbination of the Sex - instint) அறிவுறுத்தியருளும் பெருமாட்சிமையுடைமையே, திருக்கோவையாரின் தனிப்பெருஞ் சிறப்பாகும். இது பற்றியே சைவசித்தாந்தச் சான்ருேர் பெருந்தகையாகிய நமது குமர குருபரசுவாமிகள் அவர்களும்

---

I think it must be admitted to be true. If the very greatest things in each sort of literature, the master piece is unprece dented, unique never challenged or approached hence forth. "

—Dr. I. A Richard.

" ஐந்திணை உறுப்பின் நாற்பொருள் பயக்கும்
காமம் சான்ற ஞானப் பனுவல் "

என மிகவும் சிறந்தெடுத்துத் திறந்தெரித்துப் போற்றி வியந்து புகழ்ந்து பாராட்டியருளினார்கள்.

" தில்லை மூதூர்ப் பொதுவினில் தோன்றி
எல்லையில் ஆனந்த நடம்புரிகின்ற
பரம காரணன் திருவருள் அதனால்
திருவாத வூர்மகிழ் செழுமறை முனிவர்
ஐம்பொறி கைஇகந்து அறிவாய் அறியாச்
செம்புலச் செல்வர் ஆயினர் ஆதலின்,
அறிவன் நூற் பொருளும் உலகநூல் வழக்குமென
இருபொருளும் நுதலி எடுத்துக் கொண்டனர் "

எனப் பேராசிரியர், தமது திருக்கோவையார் உரைப்பாயிரத்தில் குறிப்பிட்டிருப்பதும், இங்குநாம் சிந்தித்து இன்புறுதற்குரியது.

முடிவுரை :

இங்ஙனம், இரும்பினைப் பொன்னாக மாற்றுதல் போலவும், அழுக்குமிக்க எருக்குப்பையினின்று அழகிய சிறந்த நறுமண மலரைத் தோற்றுவித்தல் போலவும், * இழிந்த காமத்தினையே உயர்ந்த சான்றாண்மையுடையதாகமாற்றித் திருத்தியமைத்து, அதனுடன் ஞானநலப் பொருளினையும் நன்கனம் பொருத்தி அழகுற விளக்கி அறிவுறுத்தும் " தேனூறு செஞ்சொல் திருக்கோவை " யின் சிறப்பினையுணர்ந்து, அதனை இடையறாது அன்புடன் ஓதிப் பயின்று, நாம்அனைவரும் நலம்பலபெற்று உய்ய முயல்வோமாக!

---

* If a man buys manure, which but itself is dirty and foul smelling and piles it near his house, on the street it would be difficult for anybody to pass by. But if some one spreads manure in his garden, on the seeds the seeds shall grow, stem and become plants, shall give flowers and their fragrance would and invitation to all around. Passets - by will be enchanted by it. The fragrance of flower is nothing but the same evil smell of manure. By rising upwards through the seed the stench of manure becomes the scent of the flower. Bad smell can become sweet smell. Similarly, sex can become spiritualised and sublimated......"

—Bhagvan Shree Rajneesh,
From Sex to Superconsciousness P. 126.

# சிவமூர்த்தங்கள்

"நஜன்"

(மலர் 35, இதழ் 11, பக்கம் 459 இன் தொடர்ச்சி)

லிங்(லயம்)கம் (தோற்றம்) சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியங்களை உணர்த்துகிறது.

மலர்ந்த அயன் மால் ருத்திரன் மகேசன்
பலந்தரும் ஐம் முன் பரவிந்துநாதம்
நலந்தரு சக்தி சிவன் வடிவாகி
பலந்தரும் லிங்கம் பராநந்தி யாமே.

பிரணவ எழுத்திலுள்ள அ உ ம எழுத்துக்களே லிங்க உரு என்கிறார் திருமூலர்.

அகரா முதலா அனைத்துமா நிற்கும்
நகரா முதலா உயிர் பெய்து நிற்கும்
அகார வுகார மிரண்டு மதியில்
அகார வுகார லிங்கம தாமே.

சிவலிங்கத்தின் சாந்தியதீத கலை திருமுடி; சாந்தி கலை முகம்; வித்யா கலை மார்பு; நிவர்த்தி கலை முழந்தாள் புவனம் ரோமம்.

இந்த லிங்க ஸ்வரூபம் சிவசக்தி ஐக்யரூபமாக விளங்குவதால் ஆனந்த மயமானவரும் மங்களத்தை அளிப்பவருமான சிவனைத் துதிப்பவர்களுக்குச் சக்தியின் அருளும் கிட்டுகிறது.

சிவலிங்கத்தின் மகிமை பற்ற யஜுர் சாகை கூறுவதாவது:

| | |
|---|---|
| நிதன பதயே நம: | நிதனபதாந்தியை நம: |
| ஊர்த்வாய நம: | ஊர்த்வலிங்காய நம: |
| ஹிரண்யாய நம: | ஹிரண்யலிங்காய நம: |
| சுவர்ணாய நம: | சுவர்ண லிங்காய நம: |
| திவ்யாய நம: | திவ்ய லிங்காய நம: |
| பவாய நம: | பவலிங்காய நம: |
| ஸர்வாய நம: | ஸர்வலிங்காய நம: |
| சிவாய நம: | சிவலிங்காய நம: |

ஜ்வலாய நம : ஜ்வலிங்காய நம :
ஆத்மாய நம : ஆத்ம லிங்காய நம :
பரமாய நம : பரம லிங்காய நம :

சிவலிங்க வழிபாடு ஆண் குறிவழிபாடு என்று சில மேனாட்டினர் தங்கள் புத்தகங்களில் எழுதியுள்ளார்கள். இது முற்றிலும் தவறு. வட்டவடிவமான ஆவுடையார் ஆதி அந்த மற்ற பரம்பொருள் என்பதை உணர்த்துகிறது. உயர்ந்து எழும்பியுள்ள பாணம் உயர்ந்த எண்ணங்கள் இருந்தால் மேல் நோக்கி முன்னேறலாம் என்ற தத்துவத்தைக் காட்டுகிறது. யோகத்தில் குண்டலினி சக்தியை மேல்நோக்கி எழச்செய்வது இந்த நிமிர்ந்த நிலையையே காட்டுகிறது.

## சிவமூர்த்தி பேதங்கள்

(1) சுயம்பு - தானே உண்டானது.
(2) தேவிகம் - தேவியால் பூஜிக்கப்பட்டது.
(3) தைவிகம் - தேவர்களால் ஸ்தாபிக்கப்பட்டவை.
(4) காணவம் - காணாத பார்வையில் ஸ்தாபிக்கப்பட்டவை.
(5) ஆர்ஷம் - ரிஷிகளால் ஸ்தாபிக்கப்பட்டவை.
(6) மானுஷம் - மனிதர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டவை.
(7) 'பாணம்' - நர்மதை நதியில் கிடைப்பது.

இவை விருக்ஷங்களாலும் ஸ்படிகம் முதலிய ரத்னங்களாலும் சுவர்ணம் முதலிய உலோகங்களாலும் ஆனவை. புற்று மண், அக்ஷதை, அன்னம், நதிமணல், வெண்ணெய், ருத்ராக்ஷம், விபூதி சந்தனம், கூர்ச்சம், புஷ்பமாலை, வெல்லக்கட்டி இவைகளாலான லிங்கங்கள் சலலிங்கங்கள் எனப்படும்.

லிங்கம் என்றால் சித்தரித்தல் எனவும் பொருள்படும். சிவபெருமான் பஞ்ச கிருத்தியங்களால் பிரபஞ்சத்தை சித்தரிக்கிறார்.

இதை உணர்த்துவதே பஞ்ச பூத ஸ்தலங்கள்.

1. அப்பு லிங்கம் (ஜலம்) ஜம்புகேஸ்வரம் (திருவானைக்கா)
2. தேயுலிங்கம் (தீ) திருவண்ணாமலை
3. வாயுலிங்கம் (காற்று) காளஹஸ்தி
4. பிருத்வி லிங்கம் (மண்) காஞ்சிபுரம்
5. ஆகாசலிங்கம் சிதம்பரம்

இந்த ஸ்தலங்களிலுள்ள லிங்க மூர்த்திகளைத் தரிசித்து இயற்கையையே இறைவனுகக்காணும் அதிசயத்தை அறிந்து அநுபூதி பெற்ருேர் பலர்.

## பஞ்சபூதலிங்கம்

"அஞ்சு கல்லால் ஒரு கோட்டை; அந்தக் கோட்டைக்கு ஒன்பது வாசல்" என்ற பாடலைக் கேட்டிருக்கிருேம். கிடைத்தற்கரிய இம்மானிட சரீரமே பஞ்ச பூதங்களின் செயற்கையால் உண்டானது என்பதே இப்பாடலின் கருத்து. நிலம், நீர், காற்று, தீ, வெளி இவ்வைந்தும் சேராத பொருள் ஒன்றும் இவ்வுலகில் இல்லை என்பது தத்துவ சாஸ்திர நிபுணர்கள் கண்ட உண்மை. இதை நன்கு அறிந்த நம்முன்னேர்கள் பஞ்சபூதங்கள் ஒவ்வொன்றும் வழிபடத் தக்கவை என்ற கொள்கையுடன் ஐந்து தலங்களை வழிபட ஒதுக்கியுள்ளார்கள்.

பிருத்வி தலம்:- காஞ்சீபுரம்; இது அம்பிகை மணலைப் பிடித்து லிங்கமாக வைத்து பூசித்த இடம். இதை நிலமாகப் போற்றி வணங்குகிருேம். மாமரத்தின் அடியில் அம்பிகையை ஈசனுடன் காணலாம். மாமரத்தின் நான்கு பெருங் கிளைகளும் நான்கு வேதங்கள்.

அப்புத்தலம்:- திருவானைக்கா; இங்கு ஜம்புகேஸ்வரர் கோயில்கொண்டுள்ள கர்ப்பக்கிருக ஸ்தலத்தில் எப்போதும் நீர் சுரந்துகொண்டே இருக்கிறது. அடிக்கடி தண்ணீரை இறைத்துவிட்டுத்தான் பூஜிக்கவேண்டும். இதை நீராகப்போற்றி வணங்குகிருேம்.

தேயுத்தலம்:- திருவண்ணுமலை: இம்மலையையே ஜோதிர் லிங்கமாக வணங்குகிருேம். கார்த்திகை தீபதரிசனம் இம்மலையே அக்னி ஸ்வரூபம் என்பதைக் காட்டுகிறது.

வாயுத்தலம்:- காளஹஸ்தி; இத்தலத்தைக் காற்றுக் கோவிலாகக் கொண்டாடுகிருேம். இங்கு கர்ப்பக் கிரகத்திலுள்ள தூண் பாமணி விளக்கின் தீப ஜோதி எப்போதும் அசைந்தாடிக்கொண்டே இருக்கிறது. இதை ஞானிகள் குண்டலினி சக்தியின் நடனம் என்று கூறுகிருர்கள்.

ஆகாசத்தலம்:- சிதம்பரம்; கடினமாகிய மண்ணில் ஆரம்பித்து பிறகு முறையே நீர், நெருப்பு, காற்று என்ற ஸ்வரூபத்தின் மூலம் பக்தியை உண்டாக்கி, பக்திப் பழக்கம் வந்தபின் சூன்யத்தில் ஸ்வரூபத்தைக் காணும்படி போதிப்பது சிதம்பரம்; சிதம்பர இரகசியம் என்று பரந்த வெளியைத் தரிசனம் செய்து வைக்கிருர்கள். (தொடரும்)

# செய்திகள்

## ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனார் குருபூஜை

**தருமையாதீனத்தில் :**

இறைவனை அடையும் அறிவு நெறியைச் சிறப்பாகச் சாத்திரத்தின் வாயிலாக விளக்கிய சந்தானகுரவர் நால்வருள் முதல்வராகிய ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனார் குருபூஜை விழா 24-10-76 அன்று காலை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நிகழ்வுற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். மாலை 7-மணி அளவில் தருமை யாதீனப்புலவர் வித்துவான், சிரோமணி திரு. வி. சபேசன் அவர்கள் "மெய்கண்டார் அருள் வரலாறு" என்ற தலைப்பில் விரிவுரையாற்றினார்கள். அன்பர்கள் பலரும் வந்து வழிபட்டும் கேட்டும் பயன்பெற்றனர்.

**சிதம்பரத்தில் :**

சிதம்பரம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடத்தில் 28—10—76 வியாழக்கிழமை மாலை 6-மணி யளவில் தில்லைத் தமிழ் மன்றச் சார்பில் ஸ்ரீ மெய்கண்டார் குருபூஜை விழாவை முன்னிட்டு விரிவுரைகள் நிகழ்த்தப்பெற்றன. தருமை யாதீனத் தமிழ்ப் புலவர், திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர் திரு. க. வெள்ளைவாரணனார் அவர்கள் தலைமையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் திரு. சுப. மாணிக்கம் M. A., Ph. D. அவர்கள் 'சிவஞானபோதம்' பற்றி விரிவுரை ஆற்றினார்கள். அன்பர்கள் பலர் வந்திருந்து நிகழ்ச்சியிற் கலந்துகொண்டு கேட்டுப் பயனுற்றனர்.

**திருப்பெண்ணாகடத்தில் :**

சந்தானாசாரியரில் முதலாமவராகிய ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனாரின் அவதாரத்தலமாகிய திருப்பெண்ணாகடத்தில் மெய்கண்டதேவ நாயனார் குருபூஜை அவரது திருக்கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நிகழ்த்தப்பெற்றது. அன்று திருவெண்ணெய்நல்லூர் ஸ்ரீ மெய்கண்ட தேவநாயனார் குருமூர்த்த ஆலயத்திலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன்

சிறப்பு வழிபாடு நடைபெற்றது. அன்று காலை திருத்துருத்திகாலை மாடம் அருள்மிகுகட ந்தைநாயகி உடனுகிய ஸ்ரீசுடர்க்கொழுந்தீசர் திருக்கோயிலில் சுவாமிக்கும் அம்பாளுக்கும் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. அன்று மாலை தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளித் திருத்துருத்திகாலைமாடம் திருக்கோயிலில் வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கியருளினூர்கள். அடுத்து மெய்கண்டதேவ நாயனூர் திருக்கோயிலுக்கு எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கியருளிய பின்னர் அருளாசியுரை வழங்கினூர்கள்.

## தருமையாதீனத்தில் கந்தபுராண விரிவுரை

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ தருமபுரீசுவர சுவாமி திருக்கோயிலில் 24—10—76 ஞாயிற்றுக்கிழமை முதல் 29—10—76 வெள்ளிக்கிழமை முடிய, தருமையாதீனத் தமிழ்ப் புலவர், வித்துவான், திரு. வீ. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., அவர்கள் "கந்தபுராண விரிவுரை" நிகழ்த்தினூர்கள். அன்பர் பலர் வந்திருந்து விரிவுரையைக்கேட்டுப் பயனுற்றனர்.

## தருமையாதீனத்தில் நிறைபணி விழா

நிறைபணி விழா என்பது புரட்டாசிமாதம் பௌர்ணமி நாளில் சிவபிரானுக்கும் அம்பிகைக்கும் செய்யப்பெறும் ஏகதின உற்சவமாகும். நினைத்த காரியங்கள் கைகூடவும், செல்வச் செழிப்பு ஏற்படவும் மறுமைக்கு வீடுபேற்றை நல்கவும் உலக மக்கள் நன்மைபடையவும் செய்யப்பெறுவது இந்நிறைபணி விழா. இந்நாளில் பல்வகையான அபிஷேகப் பொருள்கொண்டு பெருமானுக்கு அபிஷேகம் செய்து நறுமணம் உடைய மலர்களாலும் ஆபரணங்களாலும் அலங்காரம் செய்து நெய்யாலான பணியாரங்களை நிவேதனம் செய்து, தீபாராதனைகள் செய்ய வேண்டும். அறுகு, நாயுருவி, நொச்சி, வினா, வில்வம் என்ற ஐந்துவித பத்திரங்களால் அருச்சனைசெய்து வழிபட்டுத் துதித்து நலம் பெறலாம்.

இவ்விழா, திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ ஞானம்பிகை உடனுகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் 7—10—76 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கியருளினூர்கள். பக்தர்கள் பலர் வழிபட்டுப் பயன் பெற்றனர்.

**ஆதீனத் திருக்கோயில்களில் :**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கோயில்களில் வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி திருக்கோயில், சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி திருக்கோயில், திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி திருக்கோயில், திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி திருக்கோயில் முதலிய தேவஸ்தானங்களில் நிறைபணி விழா மிகச் சிறப்பாக நிகழ்ந்தது. உள்ளூர்ப் பெருமக்களும் அன்பர்களும் வந்து வழிபட்டு இறையருள் பெற்றனர்.

## கந்தசஷ்டி விழா

**வேளூரில் :**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ செல்வமுத்துகுமாரசுவாமிக்கு கந்தஷஷ்டி விழா 21—10—76 சனிக்கிழமை முதல் தொடங்கி நடைபெற்றது. 28—10—76 வியாழக்கிழமையன்று ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி, ஸ்ரீ தையல் நாயகி உடனுய ஸ்ரீ வைத்தியநாத பெருமானிடம் வேல்பெற்று சூரபத்மனை சம்ஹரித்தலும் மயில்வாகனத்தில் காட்சியளித்தலும் நிகழ்ந்தன 29—10—76 வெள்ளிக்கிழமை தீர்த்தம் கொடுத்தருளலும் 30—10—76 சனிக்கிழமை தெய்வயானையம்மை திருக்கல்யாணமும் 31—10—76 ஞாயிற்றுக்கிழமை வள்ளியம்மை திருக்கல்யாணமும் 1—11—76 திங்கட்கிழமை ஸ்ரீ வள்ளி தெய்வயானை உடனுகிய ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருத்தேரில் வலம் வருதலும் நிகழ்ந்தன. முருக பக்தர்கள் கந்தஷஷ்டி விழா நாட்களில் சித்தாமிர்தத்தில் நீராடி முருகனை வழிபட்டு நோன்பிருந்து சூரசம்ஹார காட்சியைக்கண்டுகளித்துமுருகன் அருள்பெற்றனர். கந்தசஷ்டி ஆறுநாட்களிலும் நாள்தோறும் பிரசார சபா மண்டபத்தில் மாலை 6-மணிக்கு வித்துவான், திரு. இரா. செல்வக் கணபதி, M. A. அவர்களால் கந்தபுராண விரிவுரை நிகழ்த்தப் பெற்றது. அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

**மாயூரம் - குமரக்கட்டளையில் :**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான மாயூரம் - குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்தில் 23—10—76 முதல் 29—10—76 முடிய கந்தசஷ்டி விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது 27—10—76 அன்று இடப வாகனக் காட்சியும் ( சகோபுரதரிசனமும் ), 28—10—76 அன்று

கந்தசஷ்டி - சூரசம்காரமும், 29—10—76 அன்று திருத்தேர்த் திருவிழாவும் சிறந்த நாதசுர இன்னிசை முதலியவற்றுடன் நடைபெற்றன. நாள்தோறும் மாலை 6 மணி அளவில் மாயூரம் தேசிய உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர், வித்துவான். திரு. ஆ. இராமபத்திரன் எம். ஏ., அவர்களால் "கந்தபுராண விரிவுரை" நிகழ்த்தப்பெற்றது. நாள்தோறும் ஸ்ரீ முருகப் பெருமானைத் தரிசித்தும் விரிவுரைகளைக் கேட்டும் அன்பர்கள் பலர் பயனுற்றனர்.

### தேவஸ்தானங்களில் கந்தபுராண விரிவுரை:

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கோயில்களில், திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானம், திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம், திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவர சுவாமி தேவஸ்தானம் ஆகிய தேவஸ்தானங்களில் முறையே வித்துவான். திரு. சு. மு. சுந்தரராஜன், வித்துவான், திரு. கா. ம. கண்ணப்பன், வித்துவான். திரு. சுவர்ணகாளீசுவரன் ஆகியோர் கந்தபுராண விரிவுரை ஆற்றினர். கந்தசஷ்டி விழா நாட்களில் முருகப் பெருமானுக்குச் சிறப்பு வழிபாடு நிகழ்த்தப்பெற்றது. அன்பர்கள் பலர் வந்திருந்து ஸ்ரீ முருகப்பெருமானைத் தரிசித்தும் கந்த புராண விரிவுரையைக் கேட்டும் பயனுற்றனர்.

## ஸ்ரீ சரபேசுவரருக்கு ஏகதின லட்சார்ச்சனை

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ அறம்வளர்த்த நாயகி உடனுகிய ஸ்ரீகம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ சரபேசுவரருக்கு 2-9-73 முதல் நடைபெற்றுவரும் கோடி யருச்சனையில் ஏகதின லட்சார்ச்சனை 31—10—76 ஞாயிற்றுக்கிழமை யன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. லட்சார்ச்சனை காலை 6 - மணிக்குத் தொடங்கி மாலை நிறைவுற்றது. அன்று நண்பகல் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் மாலையில் ஸ்ரீ கம்பகரேசுவரருக்குப் பஞ்சமுகார்ச்சனையும், ஸ்ரீ தர்மசம்வர்த்தினி அம்பாளுக்கு நவசக்தி அருச்சனையும் நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளிவழிபாடாற்றி, பக்தர்களுக்குப் பிரசாதம் வழங்கி ஆசியருளினார்கள்.

மாலை 6-மணி யளவில் தருமையாதீன வேத சிவாகம பாடசாலை ஆசிரியர் வியாகரண சிரோமணி பிரவசனரத்நம்

திரு. P. S. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் 'ஸ்ரீ சரபர் பெருமை' பற்றியும், தருமை யாதீனப் புலவர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் M. A. அவர்கள் 'சிவமூர்த்தங்கள்' பற்றியும் விரிவுரை யாற்றினர்கள். அன்பர்கள் பலர் லட்சார்ச்சனை வழிபாட்டில் கலந்துகொண்டும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயனுற்றனர்.

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில்

## பெரியபுராணம் திருக்கோவையார் விரிவுரைகள்

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில், திரு. S. சிவகுமார் அவர்களால் பெரியபுராண விரிவுரை 10—10—76, 14—10—76 தேதிகளில் நிகழ்த்தப்பெற்றது. திருஞானசம்பந்தர் புராணம் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திரு. N. R முருகவேள் அவர்கள் திருக்கோவையார் விரிவுரையை 11—10—76 அன்று நிகழ்த்தினர்கள். விரிவுரைகளை அன்பர்கள் பலர் கேட்டுப் பயன் பெற்றனர்.

## கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா 13—10—76 புதன்கிழமை மாலை 7 மணிக்கு கலைமாமணி திரு. புத்தனேரி R. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி திருவுருவப் படத்திற்கு அருச்சனை செய்தபிறகு நிலைய ஓதுவார் திரு. S. ஞானப்பிரகாசமும், திருமுறை பயிலும் மாணவர்களும், வேளூர்த் திருப்பதிகங்கள், முருகன் நாமாவளிகள் முதலியவற்றைப் பாராயணம் செய்தனர், தலைவர் தமது உரையில் வேளூர்க் கிருத்திகைப் பிரசாதத்தின் மகிமையை எடுத்துக்கூறி, அன்பர்கள் இன்னும் பெருமளவில் கூடி பிரசாதத்தைப் பெற்றுப் பயனடையவேண்டுமென்று தெரிவித்தார்கள். வித்துவான். ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை நன்றியுரைகளைக்கூறி, கூட்டத்தை உடனிருந்து நடத்தினர்கள். பலர் வந்து பிரசாதம் பெற்றுப் பயன்பெற்றனர்.

## அபிராமி அந்தாதி தெளிவுரை நூல் வெளியீட்டு விழா

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் 13—10—76 அன்று நடந்த கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழாவில் அபிராமி அந்தாதி தெளிவுரை நூல் வெளியீட்டு விழாவும் நடந்தது. நூலை வெளியிடுசெய்த டாக்டர். திரு. B. நடராசன் அவர்கள் தெளிவுரையில் உள்ள சிறந்த கருத்துக்களை எடுத்துக்கூறி, உரையாசிரியர் திரு. புத்தனேரி R சுப்பிரமணியம் அவர்களையும் பாராட்டிப் பேசினர். உரையாசிரியர் பேசுகையில் தெளிவுரையை எழுதுவதற்குத் தனக்குச்சந்தர்ப்பம் கிடைத்ததை ஒருபாக்கியமாகக் கருதுவதாகவும் ஸ்ரீ அபிராமியே தன்னை ஆட்கொண்டு எழுதச்செய்தாள் என்று தான் கருதுவதாகவும் தெரிவித்தார்.

## கந்தசஷ்டி விழா

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் கந்த சஷ்டி விழா வழிபாடு 23—10—76 முதல் 29—10—76 முடிய உள்ள நாட்களில் நடைபெற்றது. ஏழுநாட்களிலும் ஸ்ரீ செல்வ முத்துக்குமாரசுவாமிக்கு சகஸ்ரநாமார்ச்சனையும், ஸ்ரீ முத்துக் குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், கந்தரனுபூதி, திருப்புகழ் போன்ற அருட் பாடல்கள் பாராயணமும் நடைபெற்றன. ஒவ்வொரு நாளும் இரவு 7 மணி முதல் 9 மணி வரையில் ஸ்ரீ ஆங்கீரஸ S வேங்கடேச சர்மா அவர்களால் கந்தபுராண விரிவுரை நிகழ்த்தப்பெற்றது. அன்பர்கள் பலர் கேட்டுப் பயன்பெற்றனர்.

## மாதாந்திர சமயப் பிரசார வழிபாடு

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் மாதாந்திர சமயப் பிரசார வழிபாடு 31—10—76 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி அளவில் வடபழனி ஸ்ரீ வடபழனி ஆண்டவர் கோயிலில் தொடங்கி நடைபெற்றது. ஸ்ரீ வடபழனி ஆண்டவருக்கு முறைப்படி விசேஷ அபிஷேக ஆராதனைகளும் அர்ச்சனையும் செய்து வழிபாடு நிகழ்த்தப்பெற்றது. ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ சொக்கநாதர், ஸ்ரீ மீனாக்ஷியம்மை முதலிய மூர்த்திகளுக்கு அருச்சனைகள்செய்யப்பட்டன. வழிபாட்டின்போது நிலைய ஓதுவார் திரு. S. ஞானப்பிரகாசமும், திரு. N. இராமமூர்த்தி அய்யர், குமாரி. R. கௌரி குழுவினரும் முருகன் அருட் பாடல்களைப் பாராயணம் செய்தார்கள்.

வழிபாட்டிற்குப்பின் நடந்த சமயப் பிரசாரக் கூட்டத்திற்கு திரு. C. செல்வநடராச முதலியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். புலவர். திரு. K. ஆறுமுகம் அவர்கள் எல்லோரையும் வரவேற்றுப் பேசினார்கள். திரு. C. செல்வநடராச முதலியார் அவர்கள் பேசுகையில் கந்த புராண மகிமையையும் அதில் அடங்கியுள்ள அரும் பெரும் கருத்துக்களையும் சுருக்கமாக எடுத்துக் கூறினார்கள். பின்னர் அருட்கவி ஸ்ரீ தேவி கருமாரி தாஸர் அவர்கள் தருமையாதீனத்தினரால் நடத்தப்படும் தனிச் சிறப்பு வாய்ந்த, ஈடு இணையே இல்லாத இம்மாதிரி வழிபாட்டில் எல்லோரும் கலந்துகொள்ள முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அடுத்துப்பேசிய சென்னை D. S P. திரு. P. V. வேங்கடேசுவரன் அவர்கள் பக்தர்களுக்குப் பெரும் வழிகாட்டியாக இருக்கும் இம்மாதிரி வழிபாட்டில் பெருமளவில் எல்லோரும் கலந்துகொண்டு பயன்பெற வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டார்கள். திரு. மு. கு. புண்ணியகோடி அவர்கள் நன்றியுரை கூறியபின் கூட்டம் நிறைவுற்றது.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

**Dharmapuram Adhinam**

Sri Panchanatheeswaraswamy Devasthanam. Thiruvaiyaru.

Neatly appear and greatness of worthy I have had the pleasure of visiting this temple and receiving the blessing of Lord Panchanatheeswara and Dharmasamvarthani Ambal.

(Sd) ANBASANKER.

17—10—76. Chairman, T N P S C, Madras.

* * * *

எழிலும் அமைதியும் நிறைந்த இக்கோயிலுக்கு வந்து இறைவன் திருவருளையும், அறம்வளர்த்த நாயகியின் நல்லாசியும் பெற்றது எனது பெரும் பேறெனக் கருதுகிறேன்.

(ஒ-ம்) நா. கிருஷ்ணமூர்த்தி

துணை இயக்குநர்,

24—9—76. செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை

# எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

( நள ௵ கார்த்திகை ௴ 1௳ முதல் 30௳ முடிய )
( 16—11—1976 முதல் 15—12—1976 முடிய )

ஸ்ரீ நள ௵ ஐப்பசி மாதம் 30௳ சோமவாரம் பூர நக்ஷத்திரம் கரசை கரணம் கூடிய தினத்தில் சூரிய உதயம் முதல் 58 நாழிகை 38 விநாடிக்கு துலா லக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரியபகவான் லோக சுபிட்சத்தை முன்னிட்டு துலாராசியிலிருந்து விருச்சிக ராசியில் சங்கிரமணமாக கார்த்திகை மாதம் பிரவேசம் செய்கிறார். ஸ்ரீ நள ௵ கார்த்திகை ௴ 1௳ மங்கள வாரம் விஷ்ணுபதி புண்ணியகாலமாகும். சங்கிரமகாலபலனாவது லோகத்திற்கு சுபிட்சம் உண்டாகும். இறைவன் ஆக்ஞையால் உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் திருவீற்றிருந்து அருள் பிரசாதமாக அருளிவருகின்ற ஞான குருமார்களின் உபதேசாதிகள் பிரஜைகளுக்குத் தெய்வ சிந்தனையையளிக்கும். ஆன்றோர்களால் லோக தர்மமாக தெய்வ கைங்கரியங்கள் செயல்படும். தேவாலயங்களில் ஆறு கால பூசைகள் நடைபெற்றுவரும். பிரஜைகள் தெய்வானுக்கிரகம் நிரம்பியவர்களாகத் தொழில்துறை மேன்மையுடன் நேர்மை வாழ்க்கை நடத்துவார்கள்.

குறிப்பு :- கார்த்திகை தீபம்

கார்த்திகை மாதம் பௌர்ணமியில் வேதையில்லாத கார்த்திகை நக்ஷத்திரத்தில் விருஷப ராசியில் சந்திரனிருக்கும் போது தீபம் ஏற்றுவது உத்தமம்.

பௌர்ணமியன்று உரோகிணி அல்லது பரணியில் தீபம் ஏற்றலாம். பௌர்ணமியல்லாத திதியில் தீபம் ஏற்றுதல்கூடாது.

சூரியன் அஸ்தமனம் ஆகும்போது தீபம் ஏற்றுவது உத்தமம்.

பௌர்ணமியன்று பிரதோஷ சமயத்தில் சதுர்த்தசி இருந்தால் தீபம் ஏற்றுதல் கூடாது.

இவ்வாண்டில் கார்த்திகைமீ 20உ (5—12—76) பானுவாரம் அண்ணாமலை தீபம். இதற்கு கிருத்திகை பிரதானம்.

கார்த்திகை மாதம் 21உ (6—12—76) சோமவாரம் பௌர்ணமியன்று ரோகிணிநக்ஷத்திரமாயினும் தீபம்ஏற்றலாம். அன்று சர்வாலய தீபம்.

அன்றய தினம் சாயங்காலம் வீடுகளிலும் தேவாலயங்களிலும், இராசகிரகங்களிலும், சபைகளிலும் புண்ணிய ஸ்தலங்களிலும் எல்லா இடங்களிலும் சிறிய தீபம் பெரிய தீபங்களை ஏற்றவேண்டும். நாட்டுக்குச் சுபிட்சம் ஏற்படும்.

## 1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

( சு. சே. சோ. லா. – லி. லு. லே. லோ. – அ. )

மேஷராசி 9 பாதங்களும் சுப பலனாக நடந்துகொண்டிருக்கும். குடும்பாபிவிருத்தியில் திருப்திகரமான சூழ்நிலையாகப் பணவசதிகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். சகோதரர்களின் கல்வி, கலை, தொழில்களில் முன்னேற்றம் தரும். வித்துவத்திலும் புத்தி சாதுரிய செயல்முறைகளிலும் அரசாங்க செல்வாக்கைக் கொடுக்கும். செந்நெல் விருத்தி, வாகன சௌகரியம் திருப்திகரமாக இருக்கும். தார புத்திரர்களுக்குச் சௌக்கிய பலனைத் தரும். தெய்வத் திருவருளால் சகல பாக்கியங்களும் பெருகும். தொட்ட காரியங்களெல்லாம் சித்தி பெறும். செய்தொழில் அல்லது உத்தியோகம் மனத் தெளிவுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கும். புதன் வியாழன் சுபமாகும்.

## 2. ரிஷபம் – கார்த்திகை¾ – உரோகிணி – மிருகசீர்ஷம் ½

( இ. ஊ. ஏ. – ஓ. வ. வி. வு. – வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் சுமார் பலனாக நடக்கும். குடும்பத்தில் வரவு செலவு சரிசமமாக இருக்கும். சகோதரர் மனக்குறை ஏற்படினும் உடன் சரிபடுவதாகி சௌசன்ய ஒற்றுமை மிகும். கிருஷி செல்வம் விருத்திகரமாகவும் வாகன சௌகரியம் குறைவின்றியும் இருந்து வரும். கல்வி, கலை எழுத்துத்துறையில் சாதாரண பலனாக இருந்துவரும். மனைவியின் நலன் கருதியும் புத்திரர்களின் தொழில் வாழ்க்கை சௌகரியம் கருதியும் ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கும். மறைமுக எதிர்ப்புகள் வரவும் இந்த ராசிக்கே நலமாக முடியும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் நற்பலன் தரும். வெள்ளி சனி சுபமாகும்.

### 3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾
( கா. கி. – கு. க. ங. ச்சா. – கே. கோ. ஹ. )

மிதுனராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். குடும்பத்தில் தனாதி சௌகரியங்கள் மேலாக இருந்துவரும். சகோதரர்களுக்கு மேன்மை ஸ்திதி ஏற்படும். வாகனம் வாங்குதல் இல்லத்தில் மங்கலகரமான வைபவங்கள் நடத்தல் ஆகிய நற்பலனை ஏற்படுத்தும். சகல காரியங்களிலும் முயற்சியில் தடைப் பட்டிருந்தவைகளிலும் ஜெய பிராப்தியையளிக்கும். புத்திரர் பௌத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். தாம்பத்திய வாழ்வில் சௌசன்யம் மேலிடும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் நற்பேறு உண்டாகும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

### 4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்
( ஹி. – ஹு. ஹே. ஹோ. ட. – டி. டு. டே. டோ. )

கடகராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பணவசதி ஜீவனோபாயவசதி திருப்தியளிப்பதாக இருந்து வரும். சகோதரர் மனக்குறை ஏற்படினும் காரகன் வலுவால் சௌசன்ய நிலைமை ஏற்படுவதாகும். பூமி இயந்திர வகையில் சிரமங்களைச் சமாளித்து ஓர் முறைப்படுத்திச் செயல்படும். தேகநலம் உஷ்ணாதிக்கம் பொருந்திக் காணப்படும். ஞாயிற்றுக்கிழமையில் சூரியார்ச்சனை செய்ய நலம் தரும். செய்தொழில் முதலிய சகல கிரியைகளும் ஸ்ரீ சிவசக்தியின் அருளால் முன்னேற்றமாக நடைபெற்றுக்கொண்டிருக்கும். புதன் வியாழன் சுபமாகும்.

### 5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼
(ம. மி. மு. மெ. – மோ. ட. டி. டு. – டே. )

சிம்மராசி 9 பாதங்களும் சுமார் பலனாக நடக்கும். பணவசதி வேண்டிய அளவிற்குச் சமயத்தில் தோதாக வந்துசேரும். வாக்கு கௌரவம் பேரந்தஸ்து மிகும். சகோதரர் சௌகரியமாகவும் அன்யோன்யமாகவும் இருந்துவருவர். பந்து மித்திரர்கள் வருகை உபசரணை ஆகிய சந்தோஷ சம்பவத்தை ஏற்படுத்தும். இல்லத்தில் பெண் மகவு பிறக்கும். பூமி இயந்திரங்களினால் பூர்வ சொத்தினால் நற்பயன் ஏற்படும். இம்மாதம் பிற்பகுதியில் புத்திரருக்கு ஓர் நன்மையை ஏற்படுத்தும். கணவன் மனைவியின் வாழ்வில் சுமுகம் நிலவும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் பிறரால் தொல்லைகள் தென்படினும் மேலோரின் ஆதரவால் அவை நீங்கி நன்மைகளை உண்டுபண்ணும். வெள்ளி சனி சுபமாகும்.

### 6. கன்னி – உத்திரம் $\frac{3}{4}$ – ஹஸ்தம் – சித்திரை $\frac{1}{2}$

( டோ. ப. பி. – பு. ஷ. ண. ட. – பே. போ. )

கன்னியாராசி 9 பாதங்களும் சுமார் பலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் திருப்திகரமான சூழ்நிலையும் பணவசதிகளும் இருந்துவரும். சகோதரர் நலமாகவும் ஒற்றுமைப் பான்மையுடனும் இருந்து வருவர். சிவப்புபச்சை கற்கள்பதித்த ஆபரண பிராப்தி உண்டாகும். வித்திய வியாபாராதி எழுத்துத்துறைகளில் சிரமம் தோன்றினும் முயற்சியில் நற்பலனை ஏற்பட்டுக் கொண்டிருக்கும். மாதமுற்பகுதியை விட, பிற்பகுதியில் எல்லா விஷயங்களிலும் நன்மையை ஏற்படுத்தும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் 12உ க்குமேல் ஓர் அரிய காரிய சித்தியை ஏற்படுத்தும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

### 7. துலாம் – சித்திரை $\frac{1}{2}$ – சுவாதி – விசாகம் $\frac{3}{4}$

( ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. து. தே. )

துலாராசி 9 பாதங்களும் சுப பலன்தரும். பணவசதிகள் குறைவின்றி இருந்துவரும். குடும்ப நலம் பெருகும். சகோதரர்களுக்குச் சௌகரியத்தையும் பிரபவியத்தையும் கொடுக்கும். பசுபால் பிராப்தியில் குறைவின்றி நிறைவு காணும். தேக பிணி ஔஷதத்தால் குணமாகி ஆரோக்கியம் தரும். புத்திரர் பௌத்திரர்களின் நலன்கருதி முன் ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கும். கணவன் மனைவியின் வாழ்வில் தெய்வபக்தி நிறைந்து காணும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் முன்னேற்றமான செயல்முறைகளைத் தீவிரபடுத்தும். புதன் வியாழன் சுபமாகும்.

### 8. விருச்சிகம் – விசாகம் $\frac{1}{4}$ – அனுஷம் – கேட்டை.

( தோ. – ந. நி. நு. நெ. – நோ. ய. யி. யு. )

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் போதிய பணவசதிகளும் போஜன சௌகரியங்களும் திருப்திகரமாக இருந்துவரும். சகோதரர் ஒற்றுமைப் பான்மையில் குடும்பத்திற்கு உதவிகரமாக இருந்து வருவர். உழைப்பு காரணமாக சரீரத்தில் உஷ்ணாதிக்கம் பொருந்திக் காணும். பூமியில் இயந்திர சாதனங்களில் நற்பலனேற்படும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். இம்மாதம் 20உ க்குமேல் ஓர் வழக்கு ஏற்பட்டு ஜெய பிராப்தியாகும். செய்தொழில்அல்லது உத்தியோகத்தில் உறுதிப்பாடான செயல்முறைகள் பலமாக இருந்துவரும். வெள்ளி சனி சுபமாகும்.

### 9. தனுசு - மூலம் – பூராடம் – உத்திராடம் $\frac{1}{4}$

( பே. போ. பா. பி. – பு. த. ப. ட. – பே. )

தனுர் ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். குடும்பாபிவிருத்தியின் ஏற்படுகின்ற சிரமங்களைச் சமாளிக்கும் அளவிற்த வருவாய்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கும். சகோதரர் பந்து அம்மான்களால் தவிர்க்க இயலாத செலவுகளும் மிகுந்து காணும். வித்துவத்துவம், கலை, எழுத்துத் துறையில் திருப்தியற்ற சூழ்நிலையாக இருந்துவரும். தார புத்திரர்களின் சௌக்கியம் சாதாரணமாக இருந்துவரும். செய்தொழில் அல்லது உத்தியோகம் பெயரளவில் இருந்துவரும். மனதில் வெறுப்பு உண்டாகும். சனி கிரக பிரீதி செய்ய அல்லல் தீரும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

### 10. மகரம் – உத்திராடம் $\frac{3}{4}$ – திருவோணம் – அவிட்டம் $\frac{1}{2}$

( போ. ஜ. ஜி. – கி. கு. கே. கோ. – கா. கி. )

மகரராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பண வசதிகள் காலாகாலங்களில் ஏற்பட்டு குடும்பாபிவிருத்தியில் சௌகரியங்களை உண்டுபண்ணிக்கொண்டிருக்கும். சகோதரர்களின் தொழில்துறை முன்னேற்றமாக இருந்துவரும். பெற்றோர்களின் அன்பும் ஆசியும் சுயார்ச்சித பாக்கிய விருத்தியும் பூர்வ சொத்தினால் நல்ல அனுபோகங்களும்குறைவின்றி, இருந்துவரும். புத்திரர் புத்திரிகளுக்கு சௌக்கிய பலனை ஏற்படுத்தும். மனைவிக்குப் பித்த மயக்கம் போன்ற நலிவு கண்டு உடன் குணமாகும். செய்தொழில் அல்லது உத்தியோகம் கண்யமாக நடந்து கொண்டிருக்கும். வெள்ளி சனி சுபமாகும்.

### 11. கும்பம் – அவிட்டம் $\frac{1}{2}$ – சதயம் – பூரட்டாதி $\frac{3}{4}$

( கு. கே. – கோ. ஸ. ஸி. ஸு. – ஸே. ஸோ. த. )

கும்பராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். காரகன் வலுவால் தன வசதியை ஏற்படுத்திக்கொண்டிருக்கும். சகோதரர்களுக்கு உயர்வு தரும். பெண்கள் வகை கலகக்குறிகள் நீங்கி, சுக சௌகரியத்தைக் கொடுக்கும். வித்தியா வியாபாராதிகளில் ஆதாய பலன் ஏற்படும். நாற்கால் ஜீவன் சேர்க்கை தரும். பூமி இயந்திர வகையில் நற்பலன் தரும். புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். மேலிட சௌகரியங்களை உண்டுபண்ணும். தெய்வபலத்தினால் செய்தொழில் முதலான எல்லா அலுவல்களும் வெற்றிகரமாகச்செயல்பட்டுக்கொண்டிருக்கும். திங்கள்செவ்வாய் சுபமாகும்.